# சிலப்புச் செல்வர் ம. பொ. சி. யாழ்ப்பாணம் வருவார்

Registered as a Newspaper in Ceylon

வார மலர் ★ ★ விலை சதம் 20




# ஈழநாடு
EELA NADU

மில்க்வைற்
நீலசோப்பின்
விலையில்
எவ்வித மாற்றமுமில்லை
வழமைபோல் எங்கும் கிடைக்கும்.
ஒரு கட்டியின் விலை
சதம் 25 தான்

மலர் 11 | கீலக மாசி 28 | ஜுஹற் 21 | (11-3-69) | செவ்வாய்க்கிழமை | இதழ் 29

யாழ்ப்பாணம், செவ்வாய்
தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கழகத் தலைவருமான சிலம்புச் செல்



வர் ம. பொ. சிவஞானகிராமணியார் அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த மாதம் 7 ம், 8 ம், 9 ம் திகதிகளில் உடுவிலில் நடக்கவிருக்கும் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாட்டுக்கு வருகை தருமாறு விழாக் குழுவினரால் விடுக்கப்பட்ட அழைப்பை திரு. ம. பொ. சி. ஏற்றுக்கொண்டுள்ளதாக இதனை ஒழுங்கு செய்தவர்கள் தெரிவித்தார்கள்.

திரு. ம. பொ. சி. மூன்று நாள் விழாவிலும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

இது தவிர தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம்தொட்டு இன்றுவரை நடத்திய போராட்டங்கள் உட்பட அதன் வரலாற்றை விளக்கும்வகையில் முழு நீள நாடகமொன்றை விழாவில் மேடையேற்றவும் கட்சி வாலிப முன்னணியினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். (கா. நி)

## தமிழரசு பொதுச்சபை இன்று யாழ். நகரில் கூடுகிறது

யாழ்ப்பாணம், செவ்.
தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக போட்டியின்றித் தெரியப் பட்டிருக்கும் பட்டிருப்பு ஆட்சி மன்ற உறுப்பினரான திரு. எஸ். எம். இராசமாணிக்கத்தின் தெரிவு இன்று நடைபெறும் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட்டு, உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

இன்று காலை கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் தற்போதைய தலைவர் டாக்டர் இ. எம். வி. நாகநாதன் தலைமையில் நடைபெறும்

அடுத்த மாதம் 7-ம் 8-ம் 9-ம் திகதிகளில் உடுவிலில் நடைபெறவிருக்கும் தமிழரசு கட்சியின் வருடாந்த மகாநாடு, தொகுதிகள் தோறும் கிளைகள் நிறுவுதல் ஆகியன பற்றியும் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்படும். (கா. நி)

# பாண்டிச்சேரியை தி. மு. க. கூட்டணி கைப்பற்றியது

## முன்னுள் முதலமைச்சர் தோல்வி வீரம்மாள் வீரப்பனை வென்ருர்

பாண்டிச்சேரி, மார்ச். 11
பாண்டிச்சேரி சட்டமன்றத்துக்கான இடைத்தேர்தலில் தி. மு. க. கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலின் வாக்குகள் நேற்று எண்ணப்பட்ட போது முப்பது தொகுதிகளில் 14 தொகுதிகளை தி. மு. க கைப்பற்றியது.

காங்கிரஸ 9 ஸ்தானங்களில் வெற்றி பெற்றது. பாரத கம்யூனிஸ்ட் (தி. மு. க. கூட்டணி) 3 ஸ்தானங்களையும் சுயேச்சை உறுப்பினர் 2 ஸ்தானங்களையும் கைப்பற்றின.

30 தொகுதிகளைக் கொண்ட சட்டசபையில் தற்போது தி. மு. க. கூட்டு முன்னணி 17 ஸ்தானங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இன்னும் இரு தொகுதிகளின் முடிவுகள் ...

### முன்னுள் முதல் மந்திரி தோல்வி

காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்ட பழைய முதல் அமைச்சர் திரு. வெங்கட சுப்பாரெட்டியாரை தி. மு. க. அங்கத்தவர் திரு. ராமச்சந்திர ரெட்டியார் 152 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்ததும் இத்தேர்தலில் போட்டியிட்ட ஒரே பெண்மணியான காங்கிரஸ் அபேட்சகர் வீரம்மாள் தி. மு. க. அபேட்சகரான திரு. வீரப்பனை 692 அதிகப்படியான ...

## பதில் மாஜிஸ்திரேட்

குரும்பசிட்டி, திங்கள்
மல்லாகம் நீதிமன்றத்தில் அம்மாதம் 12ந் திகதிவரை திரு. ஜீ. வி. பாலசிங்கம் பதில் மாஜிஸ்திரேட்டாக கடமையாற்றுவார்.

## "நாவை அடக்கி வாழ வேண்டும்"

### முருகதாஸ் சுவாமிகள் கூறுகிறர்

உடுவில், திங்
''இரண்டு கண், இரண்டு மூக்கு, இரண்டு செவி, இரண்டு கைகள், இரண்டு கால்களைக் கொடுத்து ஒரே காரியத்தைச் செய்யுமாறு மனித ஜீவன்களைப் படைத்த இறைவன் ஒரு அவயவத்தைக் கொடுத்து கோடிக்கணக்கான காரியங்களைச் செய்யுமாறு பணித்துள்ளான். அந்த ஒரு அவயவந்தான் நாக்கு. நாக்கினுல் வாயினுல் செய்யும் காரியம் சொல்லும் சொற்கள் ஒன்று, நூறல்ல. புற்றீசல் போல் கிளம்பும் சொல்லில் தவறு ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். வாயினுல் கூறும் வார்த்தைகள் பலகோடி மக்களைப் பாதிக்கலாம். ஆகவே எவரையும் புண்பட செய்யாதவாறு எமது நாவை அடக்கி வாழவேண்டும்''

உடுவில் கிராமசபையின் ஆதரவில் கிராமசபைத் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற பக்திப் பாடகர் பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளின் பஜனையின் போது முருகதாஸ் சுவாமிகள் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்

சுமார் இரண்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் நிரம்பியிருந்த முருகதாஸ் சுவாமிகளின் பஜனையினை உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் தொடக்கிவைத்து வரவேற்புரை நிகழ்த்திஞர்.

## உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில்

### உள்ளூராட்சி தலைவர்களுடன்

## எதிர்க்கட்சிக்கூட்டணி நடத்தும் தேர்தல் மகாநாடு

யாழ்ப்பாணம். செவ்.
நாடு முழுவதிலுமுள்ள எதிர்க்கட்சிக்கூட்டணிக்கட்சிகளைச்சேர்ந்த உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடனும், உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்களுடனும் அடுத்த ... கொழும்பில் கூட்டுகின்றன.

கொழும்பு நகரண்டபத்தில் நாளை நடைபெறும் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி வடபகுதியிலுள்ள கூட்டணிக்கட்சிகளைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றத்தலைவர்களுக்கும், அங் ...

## சென்ஜோன்ஸ்-சென்றல் கிரிக்கெட்; வெடிகள் கொளுத்த தடை

யாழ்ப்பாணம், செவ்வாய்
இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் சென்ஜோன்ஸ்-சென்றல் கல்லூரி கிரிக்கெட் போட்டியின்போது வெடிகள் கொளுத்துவது, கோஷிப்பது போன்ற சம்பவங்களுக்கு பொலிஸார் கண்டிப்பான தடைவிதித்துள்ளனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தரவைத் தொடர்ந்து வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன், இது சம்பந்தமான அறிவித்தல் ஒன்றை இருகல்லூரிகளினதும் அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

கிரிக்கெட் போட்டி நடைபெறும் இரு நாட்களிலும் வாகனங்களில் கோஷித்துக்கொண்டு வீதிகளில் செல்வது, வெடிகள் கொளுத்துவது போன்று, மக்களுக்குக் கஷ்டம் கொடுக்கக்கூடிய எந்த அசம்பாவிதத்தையும் மாணவர்கள் செய்யக்கூடாதென இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பழைய மாணவர்கள் விஷயத்திலும் அதிபர்கள் கண்டிப்பாக இருக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள் போட்டியும் சென்றல்கல்லூரி மைதானத்திலேயே நடைபெறவிருக்கின்றது. (கா. நி.)

## ராஜிஞமாபற்றி நிஜலிங்கப்பா

புதுடில்லி, மார்ச் 10
தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அகில இந்திய காங்கிரஸ் செயற் கமிட்டியிலிருந்து செய்துகொண்ட ராஜி ...

### தமிழரசிலிருந்து

## 'விலகியவர்களை சேர்க்க வேண்டும்'

வல்வெட்டித்துறை, திங்கள்
''கட்சியிலிருந்து விலகியவர்களை திரும்பவும் சேர்த்துக் கொள்ளத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்துவது ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று, நூறல்ல. புற்றீசல் போல் கிளம்பும் சொல்லில் தவறு ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். வாயினுல் கூறும் வார்த்தைகள் பலகோடி மக்களைப் பாதிக்கலாம்.

நிரம்பியிருந்த முருகதாஸ் சுவாமிகளின் பஜனையினை உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் தொடக்கிவைத்து வரவேற்புரை நிகழ்த்தினுர்.

30 தொகுதிகளைக் கொண்ட சட்டசபையில் தற்போது தி. மு. க. கூட்டு முன்னணி 17 ஸ்தானங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இன்னும் இரு தொகுதிகளின் முடிவுகள் செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியாகவில்லை.

தி. மு. க. அங்கத்தவர் திரு. ராமச்சந்திர ரெட்டியார் 152 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்ததும் இத்தேர்தலில் போட்டியிட்ட ஒரே பெண்மணியான காங்கிரஸ் அபேட்சகர் வீரம்மாள் தி. மு. க. அபேட்சகரான திரு. வீரப்பனே 692 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்ததும் இத்தேர்தலில் குறிப்பிடத்தக்கவையாகும்.

## உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில்

# சுகாதார வார விழா

உருத்திரபுரம், திங்கள்

உருத்திரபுரம் மகாவித்தியாலயம் நேற்றுக்காலையிலிருந்தே விழாக் கோலம் பூண்டிருந்தது. மாணவர், மாணவிகளும் ஆசிரியர், ஆசிரியைகளுமே சுகாதார வார விழாவை யொட்டி நேற்றுப் பள்ளிக்கூட மண்டபத்தை அழகாக அலங்கரித்து, சுற்றுப்புறத்தையும் துப்புரவு செய்திருந்தனர்.

விழா தேவாரத்துடன் ஆரம்பமாகியது. அதையடுத்து, தேசிய பள்ளிக்கூடக் கொடிகளை வித்தியாலய அதிபர் திரு. வி. சண்முகம் ஏற்றிவைத்தார். அவர் தமது தொடக்கவுரையில் சுகாதாரத்தைபள்ளிக்கூடங்களிலும், வீடுகளிலும் போற்றி வளர்க்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினுர், இது சம்பந்தமாகப் பள்ளிக்கூடங்களில் வகுப்பு அறைகள், வளவு. சுற்றுப்புறங்களை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கும் நோக்கத்துடன் கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலையின் வேலை அனுபவத்திட்டம்பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

பின்னர், பள்ளிக்கூடச் சதுரங்கத் திடலில் மாணவ, மாணவியர்கள் உடற்பயிற்சி விளையாட்டுகளைத் திறமையாகச் செய்துகாட்டினர்.

அடுத்துப் பள்ளிக்கூட மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இந் நிகழ்ச்சிகளுக்கு பண்டிதர் திரு. எம். ஆறுமுகம் தலைமை தாங்கினுர். சுகாதாரத்தைப் பேணி வளர்க்கும் அவசியத்தை எடுத்துரைக்கும் கும்மி, கோலாட்ட நிகழ்ச்சிகள் பள்ளிக்கூட மாணவிகளினுல் சிறப்பாக நடத்தப்பட்டன. 'வீதி ஒழுங்கு' என்னும் பொருள்பற்றி செல்வி ச. தளலட்சுமியின் உரையும் இடம் பெற்றது.

சுகாதார விழாவை யொட்டி பள்ளிக்கூட மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொருட்காட்சியில் பள்ளிக்கூட விவசாயக் கூட்டுப் பொருட்கள் மரக்கறி வகைகள் வைக்கப்பட்டிருந்தன. அழகாக வைக்கோலினுலும், கடதாசி மட்டையினுலும் உருவாக்கப்பட்டிருந்த மாதிரி வீடொன்று பார்க்க வந்திருந்தவர்களைப் பெரிதும் கவர்ந்தது.

மாணவ, மாணவிகளின் தேசிய கீதத்துடன் விழா இனிது முடிவுற்றது. பள்ளிக்கூடப். பழைய புதிய மாணவ மாணவியரின் ஒத்துழைப்புடன் சிறப்புற நடைபெற்ற இவ்விழாவுக்கு உருத்திரபுரம் பெற்ருேர், மற்றும் பொதுமக்கள் பெருமளவில் வருகை தந்து, சகல நிகழ்ச்சிகளையும் கண்டு களித்தனர்.

பள்ளிக்கூட ஆசிரியைகளினது உழைப்பும், மாணவ மாணவிகளது ஒத்துழைப்பும் விழாவின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தன

ஐக்கிய அரபுக் குடியரசு

# பிரதம ராணுவ அதிகாரி கொல்லப்பட்டார்

லண்டன், மார்ச் 10

எகிப்துக்கும், இஸ்ரேலுக்குமிடையில்: நேற்று இரண்டாம் தடவையாக இடம் பெற்ற கடும் சமரில் ஐக்கிய அரபுக் குடியரசின் பிரதம ராணுவ அதிகாரி ஜெனரல் அப்துல் றியாட் கொல்லப்பட்டார்.

பாதுகாப்புக் குழியொன்றில் ஒளித்திருந்த இவரை இஸ்ரேலிய தரப்பிலிருந்து வந்த துப்பாக்கிக் குண்டுகள் துளைத்தன.

எகிப்திய ஜெட் போர் விமானங்களுக்கும், இஸ்ரேல் ஜெட்போர்விமானங்களுக்கு மிடையில் நேற்று முன்தினம் 5 மணிநேரம் ஆகாயத்தில் நடந்த கடும் சமரை அடுத்து நேற்று சூயஸ் கால்வாய்க்குக் குறுக்கே மூன்று மணி நேரம் இந்தப் பலப் பரீட்சை நடந்தது. மூன்று இஸ்ரேல் ஹெலிஹாப்டர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தி விட்டதாகவும், இஸ்ரேல் தரப்பில் 100 பேரைக் கொன்று குவித்து விட்டதாகவும் ஐக்கிய அரபுக் குடியரசு அறிவித்தது. தம்பக்கத்தில் ஒரு விமானம் மட்டுமே சுட்டு வீழ்த்தப் பட்டதாகவும், ஒருவரே கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேல் கூறிக் கொள்கிறது.

எகிப்து மீண்டும் ஒரு பெரிய யுத்தத்துக்கு அடிபோட்டுக் கொண்டிருப்பதாக இஸ்ரேல் தெரிவித்தது:

நேற்றைய மோதலில் இருதரப்பினரும் பீரங்கித் தாக்குதல்களையும், ராக்கெட் தாக்குதல்களையும் நடத்தினர்.

ஐ. நா. அமைதிப் பார்வையாளர்களின் கோரிக்கையை அடுத்து தாக்குதலை நிறுத்திக் கொண்டதாக ஐக்கிய அரபுக் குடியரசு தெரிவித்தது.

இஸ்ரேலும், ஐக்கிய அரபுக் குடியரசும் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் ஒவ்வொரு தரப்பிலும் குற்றஞ் சாட்டியுள்ளன.

ஜோர்டானுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் நேற்று 50 நிமிட நேர சண்டை நடந்தது. இஸ்ரேல் கண்காணிப்பு நிலையமொன்றை நாசமாக்கி விட்டதாக ஜோர்டான் அறிவித்தது.

நேற்று இஸ்ரேல் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையான அரபு பிரதம இராணுவ அதிகாரிக்கு அரசு முறையிலான இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

# நடத்தும் தேர்தல் மகாநாடு

யாழ்ப்பாணம். செவ்.

நாடு முழுவதிலுமுள்ள எதிர்க்கட்சிக்கூட்டணிக்கட்சிகளைச்சேர்ந்தஉள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடனும், உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்களுடனும் அடுத்த பொதுத்தேர்தல் சம்பந்தமான மகாநாடொன்றைக் கூட்டணிக்கட்சிகள் நாளை கொழும்பில் கூட்டுகின்றன.

கொழும்பு நகரமண்டபத்தில் நாளை நடைபெறும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி வடபகுதியிலுள்ள கூட்டணிக்கட்சிகளைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றத்தலைவர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அடுத்த பொதுத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளுக்கு ஒவ்வொரு தொகுதிகளிலுமுள்ள செல்வாக்குப்பற்றியும், அபேட்சகர்கள் நியமனம்பற்றியும் இம்மகாநாட்டில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிகிறது

வடபகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகர்கள் இருவரை இரு தொகுதிகளில் நிறுத்துவதுபற்றிய முக்கியமான முடிவொன்றும் இம்மகாநாட்டில் எடுக்கப்படவிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (கு. நி)

பாகிஸ்தான்

## வட்டமேசை மகாநாடு

ராவல்பிண்டி, மார்ச். 10

பதினெரு நாட்களுக்குப் பிறகு மீண்டும் இன்று, கூடியபாகிஸ்தான் அரசாங்க-எதிர்க்கட்சித் தலைவர்கள் வட்டமேசை மகாநாடு 2 மணிநேரச் சந்திப்பின் பின் நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது. ஜனநாயகச் செயல்கமிட்டி இந்த மகாநாட்டில் கலந்துகொண்டது. அரசாங்க தரப்புக்கு பாக். அதிபர் ஜெனரல் அயூப்கான் தலைமை தாங்கினுர்.

## போனஸ்

கொழும்பு, திங்கள்

பாடசாலைகளுக்கு கூடுதலான வரவுள்ள ஆசிரியர்களுக்கு வருடாந்த போனஸ் வழங்க அரசாங்கம் யோசித்து வருகிறது.

தினசரி 25 வீதமான ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வராமலிருப்பதையொட்டியே இந்த முடிவை அரசாங்கம் செயலாக்க முனைந்துள்ளதாக அறியப்படுகிறது.

# வர்த்தகர்களிடம் யாழ்.மேயர் விடுத்த வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணமேயர் திரு. எஸ். நாகராஜா சென்ற சனிக்கிழமை காலை சந்தையிலுள்ள வர்த்தகர்களைச் சந்தித்தபோது வழி பாதையில் விற்பனை செய்வதைநிறுத்துமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டார். இதனுல் பாவனையாளர்கள் சிரமத்துக்குள்ளாவதாக அவர் எடுத்துக்கூறினுர். இவ்விதம் வழிபாதையில் விற்பனை செய்பவர்களை நகரசபையால் அமைக்கப்பட்டுள்ள ஷெட்களில் வர்த்தகத்தை நடத்துமாறும் மேயர் கேட்டுக் கொண்டார். சந்தையை தொடர்ந்துசுத்தமாக வைத்துக் கொள்ளும்படியும் அவர் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மேயர், சந்தை ஐக்கிய நாணய சங்கக் காரியாலயத்தில் மேற்படி சங்கக்காரியதரிசி திரு. ந. சுப்பிரமணியம் மற்றும் சங்க அங்கத்தவர்களுடன் பேசிய போது சந்தை சுகாதாரம், மின்சாரவெளிச்சம் மற்றும் வசதிகள் பற்றி மேயரிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டது.

இப்போதிருக்கும்சந்தைக்கென ஒரு மலசலகூடமேனும் இல்லையென மேயரிடம் குறை தெரிவிக்கப்பட்டது. போதியமின்சார வெளிச்சம் சந்தைக்கு இல்லையென்றும் எடுத்துக்கூறப்பட்டது.

மேயர் இக்குறைகள்பற்றி தாம் கவனத்துக்கெடுத்துக் கொள்வதாகவும் இவைசம்பந்தமாக ஆவன செய்ய தம்மாலான முயற்சி எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

புதிய சந்தை அமைப்பது பற்றி ஏதேனும் புதியஅபிப்பிராயம் தெரிவிக்க விரும்புவோர் தம்மிடம் தெரிவிக்கலாமெனவும் மேயர் தெரிவித்தார். (ந. தி.)

## ராஜினாமா பற்றி நிஜலிங்கப்பா

புதுடில்லி, மார்ச் 10

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அகில இந்திய காங்கிரஸ் செயற் கமிட்டியிலிருந்து செய்துகொண்ட ராஜினுமாவை வாபஸ் பெறுவதற்கு மேற்கொண்டு எவ்வித முயற்சியும் எடுப்பதில்லையெனத் தீர்மானித்திருப்பதாக அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா நிருபர்களிடம் தெரிவித்தார்.

ராஜினுமாவை வாபஸ் பெறும்படி இன்று அவரை வற்புறுத்தப்போவதில்லையென்றும், அவர் முடிவுக்கே அவரை விட்டுவிடுவதென்றும் அவர் சொன்னுர்.

## 'விலகியவர்களை சேர்க்க வேண்டும்'

வல்வெட்டித்துறை, திங்கள்

''கட்சியிலிருந்து விலகியவர்களை திரும்பவும் சேர்த்துக் கொள்ளத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்துவது உத்தமம். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் இரண்டாந்தர பிரஜைகளாக வாழாமல், பெரும்பான்மையருடன் சமத்துவமாக வாழ நாம் இன்னும் எவ்வளவோ தியாகங்களையும், சாத்வீகப் போராட்டங்களையும் செய்யவேண்டியுள்ளது'

இவ்வாறு தமிழரசுக்கட்சி தலைவர் போட்டியிலிருந்து விலகிய அட்வக்கேட் ஜெயக்கொடி இங்கு நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினுர்.

# நமது நோக்கு

''கோவிலிலுள்ள மூர்த்தி ஒரு கல், அது அவனுமல்ல அவளுமல்ல. ஆகவே அதற்கு வருமானவரி விதிக்கப்படாது'' என்று இந்தியாவிலே ஒரு கோவில் நிர்வாகிகள் வழக்காடினராம்.

ஆனுல் சுப்ரீம் கோட்டு நீதி அரசர் இராமசாமி அளித்த தீர்ப்பில் ''வருமானவரிச் சட்டப்படி இந்து கடவுளும் ஒரு தனி நபர்தான். இந்துக் கோயிலிலுள்ள மூர்த்தியும் சொத்து வைத்துக் கொள்ளத் தகுதியுள்ள சட்ட பூர்வ நபர் ஆகும். அவருடைய சொத்து அவருடைய நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. ஆகவே அந்த நிர்வாகிகள் மூலம் கடவுளுக்கு வரிவிதிக்கலாம்'' என்று குறிப்பிட்டுள்ளார்!

அங்கு ஒரு பக்தர் தம் சொத்துக்களை கோயிலிலுள்ள இரு மூர்த்திகள் பெயருக்கு எழுதிவைத்திருந்தார். அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்துக்கு வருமான வரி அதிகாரிகள் வரி விதித்தார்கள். இதை எதிர்த்து நடந்த வழக்கே அது.

இந்தத் தீர்ப்பிலிருந்து இந்துக் கோவிலிலுள்ள கடவுள் வெறும்கல் அல்லவென்றும் வரி விதிக்கக்கூடிய தனி நபர் என்றும் ஏற்படுகின்றது.

வரியிலிருந்து தப்புவதற்காக சுவாமி ஒரு கல்தான் என்கிருர் கோவில் நிர்வாகி நாத்திகரும் கூட அப்படித் தான் கூறுவர். வரி வசூலிப்பது சட்டப்படி சரியே என்று தீர்ப்பளித்த நீதிபதி கடவுளை ஒரு நபர்தான் என்கிருர்.

வேதாந்திகளைக் கேட்டால், கல் என்று சொல்லவைப்பவரும், நபர் என்று சொல்ல வைப்பவரும் கடவுள் தான் என்று கூறக்கூடும். அவ்வித தீர்ப்பளிக்கச் செய்தவரும் கூட கடவுளே என்று ஏற்படும். கடவுள் தமக்குத் தானே விரோதமாக இந்தத் தீர்ப்பை செய்து கொண்டாரா? அப்படியாயின் ஏன்? என்ற கேள்வி எழுகின்றது.

தமிழரசர்கள் செங்கோல் செலுத்திய காலத்தில் ஊர் மக்களின் பொதுவுடமையான கோவில்களுக்கு மான்யங்கள் விட்டனர். காரணம் கோவில்கள் மூலம் சமூகத்துக்குப் பல பல சேவைகள் நடைபெற்றன. பசியாற்றல், மருத்துவம், கல்வி, கலை முதலிய பல நன்மைகள் கிடைத்தன. ஆகவே அக் காலத்தில் கோயில்களுக்கு மான்யங்கள் விடும்படிகடவுள் மன்னர்களைத் தூண்டினுர் போலும். இக் காலத்தில் அந்தப் பொதுப் பணிகளைக் கோவில் நிர்வாகிகள் பெரிதும் விட்டு விட்டதாலும், பல பெருச்சாளிகள் புகுந்து சுரண்டுவதாலும் வரி விதிக்கும்படி அந்தக் கடவுள் செய்திருக்க வேண்டும்.

கோயில்கள், சமூகத்தின் நன்மைக்காக பொதுமக்களாலேயே எப்போது நடைபெறுகின்றனவோ அப்போது மக்களின் ஆதரவும் கோவில்களுக்கு அமோகமாகக் கிடைக்கக் கூடும். வரி விதிப்பதற்குப் பதில் அதிக மான்யங்கள், கோவில்களுக்குக் கிடைக்கும்படி கருணைமிக்க உண்மை என்கிற கடவுளும் பார்த்துக் கொள்ளலாம்.

வானமண்டலப் பாதையில்

# பூமியை வலம் வருகிறார்கள் அப்போலோ-9 வீரர்கள்

டெக்ஸாஸ், மார்ச். 10

அமெரிக்காவின் 'அப்போலோ-9' வின் வெளி வீரர்கள் வானமண்டலப் பாதையில் 119 மைல் தூரத்தில் பூமியை வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். விண்வெளிப்பயணத்தின் எட்டாவது நாளான இன்று வழிகாட்டிமுறைப் பரீட்சையை விண்வெளி வீரர்கள் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று விண்வெளிவீரர்கள் ஒரு மணி நேரம் கூடுதலாகத் தூங்கிவிட்டனர். விண்வெளி பயணத்தின் தகவல் அதிகாரி, அவர்களை எழுப்பினர். பூமியைப் பல கோணங்களில், படம் பிடிக்கும்படி இவர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

119 மைல் வானமண்டலப் பாதையில் பூமியை வலம் வந்து கொண்டிருக்கும் விண்வெளிவீரர்கள் 85 நிமிடத்துக்கு ஒரு தடவை பூமியைச்சுற்றி வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நாட்டுக் காளமேகம் ஆசுகவி வேலுப்பிள்ளை

## அவர் எழுதிய நூல்களின் மறுபதிப்புகள் வெளிவருதல் பயன் மிக்கதாகும்

**ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களது நினைவு நாளை யாழ். இலக்கிய வட்டம் வயாவிளான் - பலாலி தெற்கு வாலிப சங்கச் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் அவர் பிறந்த ஊராகிய வசாவிளானிலேயே இம்மாதம் 7ந் திகதிகொண்டாடியது.**

''ஆசுகவியால் அகில உலகமெலாம் வீசு புகழ்க் காளமேகம்'' எனக் காளமேகப் புலவரைப் புகழ்ந்தனர் இரட்டையர். அப்படிப் புகழக்கூடிய ஆசுகவியாக ஈழத்திலே நம் கண்காண வாழ்ந்தவர் கல்லடி வேலுப்பிள்ளை என்னும் ஆசுகவியாவார். ''அச்சமென் பதிருப்பினும் இல்லாமை சொல்லேன் அதிகநிதி வழங்கினும் இல்லாமை சொல்லேன் பக்ஷக்ஷத்துக்காயினும் நான் இலாமை சொல்லேன், பரிகசிப்பவரைத் துணிந்து பரிகசிப்பேன்'' என்று தலை நிமிர்ந்து இறுமாப்போடு தன்னைப் பற்றியே பாடிய கவிஞர் அவர். குத்தலாகக் கிண்டலாக நகைச்சுவையுடன் விடை கூறுவதிலும், அப்படியான பாடல்களைப் பாடுவதிலும் அவரை மிஞ்ச அவர் காலத்தில் யாரும் இருந்தது கிடையாது. ''தீவிர விவேகவிடை செப்ப இரண்டர்த்த மொழி கூற எதிரிகள் நாவைக் குறுக்க மேவிடிபோற், கண்டனம் இறக் கல்லடியானைப் போலொருவர் உண்டென் றெவரும் உரையார்'' என்பது ஒரு கவிஞர் அவரைப் பற்றிக் கூறிய பாடல். மிகச் சரியான மதிப்புள்ளபாடல்.

'கவிசமயம்' என்றொரு சமயம் சில கவிஞர்களுக்குக் கிடையாது. எந்த இடமும் எந்தச் சமயமும் கவிசமயம்தான். குருகவி மகாலிங்கசிவம் அப்படிப் பட்டவர் என்பார்கள். ''ஓலை தேடி எழுத்தாணி தேடி ஆள் ஒய்ந்திருக்கும் இடம் தேடியே ஒரு மூலைதேடி'' ஒரு கவி பாடும் புலவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் 'ஒரு பாபாடுங்கள்,' என்ற உடனே கவிமாரி பொழியக்கூடிய 'ஆசுகவிகள்'தான் உண்மைக் கவிஞர்கள். அவர்கள் எந்த இடத்திலும் எந்தச் சமயத்திலும் கவிகளாகவே இருப்பார்கள். இதோ கல்லடி வேலுப்பிள்ளை பாடிய ஒரு கவிதையையும் சந்தர்ப்பத்தையும் பாருங்கள்.

### இரசிகமணி கனக. செந்திநாதன்

இரத்தினபுரியில் வசித்த சுப்பையா பிள்ளைஎன்பவரது வீட்டுக்கு விருந்தாளியாக கல்லடி வேலுப்பிள்ளையவர்கள் போயிருந்தார்கள். வீட்டு அம்மையார் புலவரைக் கண்டதும் விசேட கறிவகைகளுடன் சமையல் செய்திருந்தார். ஆனால் புலவரோ சுப்பையா பிள்ளைக்காகக் காய்ச்சிய ஒடியற் கூழையே விரும்பிஉண்டார். கூழ் அவரது மனதிற்குப் பிடித்திருந்தது. குடித்து முடிந்ததும் அவர் வாயிலிருந்து அந்த ஒடியற்கூழைப் பற்றியே ஒரு கவிதை பிறந்தது. அது இது:-

''அல்லையுற்று ரத்னபுரி
பண்டியப்பா லேநிவிற்றிக்
கொல்லையடைந் தேயலுப்புக்
கொண்டதற்கு —கல்லடியான்
வண்டாரும் மாலையணி
மற்புயச் சுப்பையனுடன்
கொண்டாடி நஞெடியற்
கூழ்.

இப்படியாகக் காரைதீவிலுள்ள ஒரு சைவர் கொடுத்த சாப்பாட்டைப் பற்றியும் கொடிகாமம் என்ற ஊரைப்பற்றியும் பாடியுள்ளார். பிற தனிக் கவிகளும் ஏராளம். கிராமம் கிராமமாக கற்பனையுடன் சேர்த்து அவர் பாடல்களும் முசுப்பாத்திச் செயல்களும் பேசப்படுகின்றன. அவற்றையெல்லாம் கேட்கும்போது அற்புதமாய் இருக்கும்.

பிற்காலத்தில் அவர் 'கதிர்காம வேலவர்மீது பதிகம், 'உன் சித்தாந்தமென்ன?' என்னும் பாடல்களைப் பாடியுள்ளார். கதிர்காம வேலவர்மீது பாடிய பாடலிலே ஒன்றைப் பார்ப்போம்.

ஈயாத லோயர்களை வஞ்சம்,
பொருமை நிறை
ஈனர்களை ஆண்மை பேசி
ஏழைகளை வாதனைசெய்
வார்களைக் கைக்கூலி
ஏற்றுவயி றேம்பு பவரை
நாய்போற் றிருந் திச்சகம்
பேசுவாரை நல்
லாரை புணரா மூடரை
நான்பிரபு நான்யோக்ய
னெனவா யடித்துவீண்
நடனஞ் செயும் கயவரை
ஓயாத பொய்யரைச் செய்ந்
நன்றி யெண்ணுத
உலுத்தரைக் குடிகாரரை
உயர்மக்களாய் மதித்
தேமாந்த வருளுல
கத்திலே நானுமொருவன்
தூயமதிநீயினிந் தந்தென்னை
ஆரெனது
சொல்லினிக் கேட்டொழு
குவார்
துய்ய கதிர் காமநுறை
செய்யவடிவேலனே
சுப்ர மணியக் கடவுளே

வாயடித்தல், உலுத்தர் ஏழைகளை வாதனை செய்தல் வயிறேம்புதல் யோக்யன், நடனஞ் செயுங் கயவர், என்ற சாதாரண கிராமியச் சொற்கள் இக் கவிதையையுயர்த்துவதைப் பார்க்கலாம். கல்லடி வேலுப்பிள்ளையவர்கள் தம் காலத்திலேயே போலிப் புலவர்கள் மிகுதியாகி விட்டதை உணர்ந்தார். உண்மைப் புலவர்களது மதிப்புக் குறைவுபடுவதை அறிந்தார். போலிப் புலவர்களைக் கண்டித்து அவர் பாடிய பாடலொன்று வருமாறு:-

முன்னே ஒருகவிக்கு
முன்னூறும் நானூறும்
பொன்னே கொடுப்பர்
புலவர்க்கு— இந்நாளில்
வாசிக்க அறியாத
வம்பர் தலைப்பட்டு
காசுக்கஞ் ஞாறு கவி

கல்லடி வேலுப்பிள்ளை அவர்களைப் பற்றி எவ்வளவோ எழுதலாம் பேசலாம். ஆனால் இந்தச் சில்லறை எழுத்துக்களும் பேச்சுக்களும் அவரை நிலைநிறுத்த நிலைக்கப் போதுமா? போதாது. அவரது பரந்த புலமையை விளக்கப் பலநூல்கள் வெளிவரவேண்டும். அவர் எழுதியுள்ள கவிதை நூல்கள் எல்லாம் சேர்ந்த பெரிய கவிதைத் தொகுதி எமக்குத் தேவையில்லையா? 1918ம் ஆண்டு அவர் வெளியிட்ட யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்னும் நூல் இரண்டாவது பதிப்பாக வெளிவந்தால் சரித்திர ஆராய்ச்சியாளர்க்கும், எழுத்தாளர்க்கும் இடப்பெயர் விளக்கத்திற்கும் எவ்வளவு பயன்படும்? 400 பக்கத்திற்கு மேற்பட்ட அந்நூலை மீண்டும் பதிக்க அவரோடு தொடர்பு பட்டோர் முன்வரவேண்டும். பிற்காலச் சந்ததி நம்மைக் குறை கூறவைக்காமல் முயலவேண்டியது நமது கடன்.

# கவியின் உவமை நயம்

தசரதன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் போது வாசலில் நம்மை அழைக்கின்றான் கம்பன். புவிராஜசிங்கமான சக்கரவர்த்தி, வாசலில் தவராஜசிங்கமான விஸ்வாமித்ர மஹரிஷியைப்பார்த்துவிட்டான். உடனே, தன்னைச் சக்கரவர்த்தி என்பதையே மறந்து, எழுந்து, விரைகின்றானாம். அதனால் அவன் மார்பில்உள்ள ரத்னாபரணங்கள் அலைகின்றனவாம். இதோ அக்காட்சி.

வந்துமுனி எய்துதலும்
மார்பிலணி ஆரம்
அந்தரதலத்(து) இரவி அஞ்ச
ஒளிவிஞ்ச

இப்போ இருவருக்கும் உவமையைப் பார்ப்போம். இந்திரலோகத்திற்கு பிரமதேவர்போனால், இந்திரன் எவ்வளவு உபசாரம் செய்வானோ, அதுபோல் விஸ்வாமித்ரரை பிரமா என்றும் தசரதனை இந்திரன் என்றும் கூறுகிறான் கவிஞன்.

கந்தமலரில் கடவுள்
தன் வரவு காணும்
இந்திரன் எனக் கடிது எழுந்து
அடிபணிந்தான்.

விஸ்வாமித்ரரை பிரமா என்று ஏன் உவமிக்கின்றான் கவிஞன்? அவர் பிரமாவேதான்; திரிசங்குவிற்காக ஒருஸ்வர்க்கத்தையே சிருஷ்டித்தவரல்லவா? ஆகவே படைக்கும் ஆற்றலுண்டு என்பதால் கந்தமலரிற்கடவுள் என்றான். அதே சமயம், தசரதனைஏன் இந்திரன் என்றார் என்றால் தேவேந்திரனின் பகையாகிய சம்பரனைத் தொலைத்து அவனுக்கு அரசளித்த ஆற்றலுடைய நரேந்திரனைக் காண்கின்றான் கவிஞன். விஸ்வாமித்ரரைச் சபாமண்டபத்திற்குஅழைத்தேகித் தன்சிம்மாதனத்தில் இருத்தி, பணிவுடன், ''ஸ்வாமி நான் தேடி வந்து தரிசிக்கவேண்டிய தாங்கள், என்னுடைய நாட்டிற்கு- இந்த நகரத்திற்கே வந்து விட்டீர்களே! என்ன பாக்கியம். இந்த நாட்டிலுள்ள மக்கள் செய்த தபோபலமோ?'' என்று பேசத் தொடங்குகின்றான்.

''நிலம்செய் தவம்
என்(று) உணரின்
அன்று; நெடியோய்! என்
நலம்செய் வினை
உண்டெனினும்
அன்று; நகர் நீயான்
வலம்செய்து வணங்க எளி
வந்த இது, முந்(து) எம்
குலம் செய் தவம்
என்(று) இனிது
கூற, முனிகூறும்

மஹரிஷி நாட்டை விட்டுக் காட்டுக்கு வந்திருக்கிறாரே இது நாடு செய்த தவமோ' என்றுயோசிக்கின்றான், மன்னன். அப்படி எண்ணி அவன் உள்ளம் அமைதி பெறவில்லை; நகரத்திற்கு வந்து, தன்னையும் தேடிச்சபாமண்டபத்திற்கே வந்துவிட்டாரே! இது என் பெரும் பாக்கியமோ என்றும் ஆலோசிக்கின்றான். அந்தக் குதூகலத்திலும் திருப்தியடையவில்லை.

### இராமாயண இரசிகமணி ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் (நல்லை ஆதீன கர்த்தர்)

தானும் குடிகளும் செய்த தவம் போதாது என்று, அந்த முடிவைப் பணிவோடு 'எம்குலம் செய்தவம்' என்று கூறிவிடுகின்றான். தசரதன் சூட்டிய புகழ்மாலையை ஏற்ற முனிவன், உடனே மன்னனுக்கு ஒரு புகழ்மாலை சூட்டுகின்றான்.

என் அனைய முனிவரரும்,
இமையவரும், இடையூ(று)
ஒன்(று)
உடையாரானல்
பன்னகமும் நகுவெள்ளிப்
பனிவரையும் பாற்கடலும்
பதும பீடத்(து)
அந்நகரும் கற்பகநாட்(டு)
அணிநகரும் மணிமாட
அயோத்தி என்னும்
உன்நகரும் அல்லாது
புகலுண்டோ இகல்கடந்த
புலவுவேலோய்

''என் போன்ற மஹரிஷிகட்கும் தேவர்கட்கும் டன் திருமாலுடன், பிரம்மாவுடன் சேர்த்துப் புகழலாமா?'' என்று கேட்கின்றான். மஹரிஷியும், ''மன்னவா, நாம் இன்று பூலோகத்தில் இருக்கின்றோம். பூலோகத்திலேயே மஹா பராக்கிரம சாலியாகிய நீ இருக்கும்போது நாம் கைலாசத்துக்கோ, வைகுந்தத்துக்கோ போகவேண்டிய அவசியமில்லையே' என்று கூறி,

சம்பரனைத் தொலைத்து நீ
அன்றளித்த அரசனன்றோ?
புரந்தன் இன்று ஆள்கின்றது

என்று முற்றுப்புள்ளி வைக்கின்றான் மஹரிஷி. சக்கரவர்த்தியின் நெஞ்சிலே இதுவரை பொங்கிக்கொண்டிருந்த உவகைக்கடல் வற்றத் தொடங்குகிறது! ஏன்? விஸ்வாமித்திரன் மீண்டும் பேசத் தொடங்குகிறான். ''தருக்களோடு கூடியகாட்டிலே தவத்தின் அங்கமாக நான் ஒரு யாகம் நடத்தப் போகின்றேன். இமயமலைவாசியாகிய நான் இப்போ இதற்காக வனத்துள் சித்தாஸ்ரமத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டேன். தவ வேள்வி செய்து ஒருபெரிய காரியம் சாதிக்கப் போகின்றேன். போகப்போக இது

## கம்பர் கவி விருந்து — 7

அபாயம் வந்தால், அபயம் என்று அடையும் இடம் ஐந்து'' என்று ஆரம்பிக்கின்றான் முனிவன். கைலாசம், பாற்கடல், பிரம்மலோகம், இந்திரலோகம் என்று கூறி உன் பொன்னகரும் என்கின்றான். ஏன் இப்படிக் கூறுகின்றான். சக்கரவர்த்திக்கே ஆச்சரியமாயிருக்கிறது. ''ஸ்வாமி, என்னை சிவனு உணரலாம். அது உலகப் பணி. அப்படி நான் செய்யும் வேள்விக்கு இடையூறு ஏற்படுவது இயற்கை. அது அரக்கரால்தான் வரும். அந்த அரக்கரும் கூட்டமாகத்தான் வருவார்கள்'' என்று கூறும்போதே,

(5-ம் பக்கம் பார்க்க)

# திருமுறைகள்: அவை ஆன்மாக்களை இன்ப உலகிற்கு இட்டுச் செல்லும் சாதனம்

[நூல்விமர்சனம்: நூல்- பன்னிருதிரு முறை மலர்: திருமுறைக்கழக வெளியீடு, வட்டு கிழக்கு, சித்தன் கேணி.]

செந்தமிழ்த்திரு நாடு தெய்வமணங் கமழ் பெருநாடாகும். அத்திருநாட்டில் வற்றாத நீரூற்றுப்பொய்கை மலரின் பெறற்கரும் பரிமளத்தை நன்னெறிச்செல்வர்கள் சுவாசித்து இன்புறச் செய்கின்றாள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அளித்தபதிகரணப் பேரொளி, பதிந்து பற்பல திருவருளை எம்மானவரும் எளிதில்எய்தி இன்புறச்செய்துவருகின்றார்கள். அடியாரின்பொன்மொழிகளேசைவ சமய உயிர் நாடிகள்.

திருமுறைகளோ அருள்மறையன்னபயனுடையன. அவை எந்நாளும் துன்ப

மன்னனவன் உலகிற்
கொருமழையானவன்
பொன்னனவன் உலகிற்
கொரு மழையானவன்
என்னனவன் இசையான
வன் இளஞாயிற்றின்
சோதி
அன்னனவன் உறையு
மிடம் ஆலந்துறை



# காந்திஜி ஒரு நேர்மை மிக்க

டாக்கிக் கொள்ளவேண்டுமென்று எப்பொழுதும் முயன்றவர். மகாத்மா குற்றம் கூறுபவர்கள் தங்கள் பேனாவை அடக்கும்படி செய்யத்தக்க நேர்மையான

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சரியான மதிப்புள்ளபாடல். லுள்ள. ஒரு சைவர் கொடு சுப்ர மணியக் கடவுளே ண்டியது நமது கடன்.



# காந்திஜி ஒரு நேர்மை மிக்க பத்திரிகையாளர்

**"இலாபத்துக்காக நடத்தும் வர்த்தக ஸ்தாபனமாகப் பத்திரிகை இருக்கக்கூடாது. சமூகத்துக்குச் சேவை செய்யவேண்டும் என்ற பரிசுத்த நோக்கத்துடனேயே நடத்தப்படவேண்டும். பத்திரிகை வெளியுதவியின்றி நடக்கத்தக்கவாறு சந்தாக்காரர் முன்வரின், அது, பத்திரிகையின் சேவையை விரும்புவதற்குச் சாட்சியமாகும்."**

'இந்தியன் ஒப்பினியன்', 'ஹரிஜன்', 'யங் இந்தியா' 'நவஜீவன்' போன்ற பல வாரப் பத்திரிகைகளை நடாத்திய மகாத்மா காந்தி ஒரு பத்திரிகையாளரா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழலாம். மகாத்மா ஒரு பத்திரிகையாளர்தான். ஆனால் இன்று சாதாரணமாக நாம் கருதும் பத்திரிகையாளர் என்ற பட்டியலில் அடங்காத ஒரு தனித்துவம் வாய்ந்த பத்திரிகையாளர் அவர்.

## செல்வி குணமணி கதிரவேலு

தனக்கென விசேஷ பண்புகள் பலவற்றைக் கொண்டுள்ள அவரின் பத்திரிகைகளை மற்றப் பத்திரிகைகளோடு ஒப்பிட்டு நோக்க முடியாது. ஆசிரியத் தலையங்கம் எழுதும்போது 'நாங்கள்' எனக் குறிப்பிடமாட்டார். எப்பொழுதும் நான் என்றே எழுதுவார். இதனால் பத்திரிகைகளின் உள்ளடக்கத்திலும் மாறுபாடு ஏற்படும். தனது கருத்துக்களையே அதிகம் தனது பத்திரிகைகளில் எழுதும் மகாத்மா அதிகமான கலங்களைத் தானே நிரப்புவார். இதனால் 'புதினமாக்குதல்' என்ற வேலைக்கே அவரின் பத்திரிகையில் இடமிருக்காது. அவரது கருத்துக்களும் நோக்கங்களுமே இடம் பெறுவதால் புதினங்களை அவரின் பத்திரிகைகளில் எதிர்பார்ப்பவர்களை ஏமாற்றமே வரவேற்கும். மிக அபூர்வமாகவே சேவை நலம் பாராட்டுகளையோ அல்லது மரண அறிவித்தல்களையோ காணலாம். தனக்கென ஒரு குறிக்கோளைக் கொண்ட மகாத்மா தன் குறிக்கோளை நிறைவேற்றும் கருவிகளாகத் தனது பத்திரிகைகளைக் கொண்டார். இவரின் ஒரே பத்திரிகை ஹிந்தி, குஜராத்தி, தமிழ், ஆங்கிலம் ஆகிய பல மொழிகளிலும் வெளிவரும்.

இன்று பத்திரிகை வளர்ச்சிக்கு முக்கியமாக உதவுவன விளம்பரங்களே. இலாபத்துக்கு நடத்தும் வர்த்தக ஸ்தாபனமாகப் பத்திரிகை இருக்கக்கூடாதென்ற நோக்கத்தைக் கொண்ட மகாத்மா பிறருதவியின்றி சுதந்திரமாகப் பத்திரிகை இயங்குவதையே விரும்புபவர். ஆதலால் விளம்பரங்களை அறவே வெறுத்தொதுக்கினர். 'சேவையின் பெயரால் சில வியாபாரிகளிடத்தில் போய் பத்திரிகைக்கு விளம்பரங்கள் தருமாறு யாசிப்பதைவிடப் பொதுவாகச் சமூகத்தையணுகி தங்கள் பத்திரிகை நீடித்து நிலைக்க அவர்கள் செய்யவேண்டிய கடமையை அவர்களுக்கு எடுத்துச் சொல்வது எல்லாவிதத்திலும் எல்லோருக்கும் நல்லது. எனக் கூறும் மகாத்மா இதனாலேயே விளம்பரங்களைத் தனது பத்திரிகைகளில் தவிர்த்தார்.

பொதுவாகக் கூறின் இன்று பல பத்திரிகைகள் லாபத்தின் பொருட்டே நடாத்தப்படுகின்றன. ஆனால் மகாத்மா காந்தி இதை வெறுக்கிருர். அவரின் பத்திரிகைகள் லாபத்துக்காகவல்லாமல் சமூகத்திற்காக என்ற ஒரே நோக்குடனே எழுந்தவை. லாபம் கிடைக்கின்றது என்ற காரணத்திற்காகப் பத்திரிகை நடத்தப்படாமல் சமூகத்துக்குச் சேவை செய்யவேண்டுமென்ற பரிசுத்த நோக்கத்துடனேயே நடத்தப்படவேண்டுமானல் அச்சேவை சமூகத்தின் பேரில் பலவந்தமாகச் சுமத்தப்படலாசாது. சமூகம் விரும்பினல்தான் அச்சேவை செய்யவேண்டுமென்ற பரிசுத்த நோக்குடனேயே நடத்தப்படவேண்டுமென்ற கருத்து உயர்ந்தது. அப்பத்திரிகை வெளியுதவியின்றி நடக்கத்தக்கவாறு அவ்வளவு சந்தாதாரர்கள் முன்வரின் அதுவே சமூகம் பத்திரிகையின் சேவையை விரும்புகிறது என்பதற்கும் சாட்சியம்'' எனக் கருதும் மகாத்மாவின் பத்திரிகைகள் இந்தக் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கண்ணடிகளாக விளங்கின.

சமூக எண்ணங்களை அறிய ஆசிரியர்களுக்கும் வாசகர்களுக்குமிடையே நெருங்கிய தூய சம்பந்தத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டுமென்று எப்பொழுதும் முயன்றவர் மகாத்மா. குற்றம் கூறுபவர்கள் தங்கள் பேனவை அடக்கும்படி செய்யத்தக்க நேர்மையான போக்கு இருக்கவேண்டுமென்னும் போக்குடைய மகாத்மா காந்தி மிகைப்படுத்தியோ, தீரவிசாரியாமலோ, வேண்டுமென்றோ, மற்றவர்களைத் திருப்திப்படுத்தவோ ஒரு வார்த்தைதானும் தனது பத்திரிகைகளில் எழுதுவதில்லை.

சுருங்கக்கூறின் உண்மை, சுருக்கம், எளிய சொல்

(5-ம் பக்கம் பார்க்க)

[நூல்வெளியீடு ... நூல்- பன்னிருதிரு முறை மலர்: திருமுறைக்கழக வெளியீடு, வட்டு கிழக்கு, சித்தன் கேணி.]

செந்தமிழ்த்திரு நாடு தெய்வமணங் கமழ் பெருநாடாகும். அத்திருநாட்டில் வற்ருத நீரூற்றுப்பொய்கையில் பன்னிரு திருமுறைகளாகிய பதும மலர் மலர்ந்த பாக்கியம் தமிழ் மக்கட் பரப்பிற்கே கிடைத்தது. அம் மலரின் இதழ்கள் ஐந்தருமலர்களினும் விஞ்சிய விழுப்பமுடையன. யாழ்ப்பாணமாகிய வனிதை, தன் விருப்பப்படி ஆங்காங்கே இதழ் இதழ்களாக நல்கி சைவப்பேருரை மன்றங்கள் வழியாகத் திவ்விய திருவடி மலரின் பெறற்கரும் பரிமளத்தை நன்னெறிச்செல்வர்கள் சுவாசித்து இன்புறச் செய்கின்ருள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அளித்தபதிகரணப் பேரொளி, பதிந்து பற்பல நகரங்கடோறும் வீசுகின்றது. நாத்தடிப்பால் நாஸ்திகம் பேசாத நாவலரும் பாவலரும் பல்கிய சிற்சில மன்றங்களில் சொன்மாரியாய்ப் பொழிந்தும், அழியா எழுத்தில் அருள்வளம் பொதுளநல்கியும்செம்மான் திருவருளை எம்மானவரும் எளிதில்எய்தி இன்புறச்செய்துவருகின்ருர்கள். அடியாரின்பொன்மொழிகளேசைவ சமய உயிர் நாடிகள்.

திருமுறைகளோ அருள் மறையன்னபயனுடையன. அவை எந்நாளும் துன்பமின்றி ஆன்மாக்கள் இன்பமடையச்சாதனமானவை. அவை, சிவத்திருவாக்கிய வேத சிவாகம உண்மைப் பொருளைப் பசுமரத்துஆணி போல் மானவப் பண்புடையார்க்கெல்லாம் இன்பப் பெருவாழ்வை அளிப்பன. முதற்றிருமுறையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பிறர் துயரந்தாங்காப் பேரருளாளராதலும்செவ்வியுடைமையும், சிவபிரானு அடியாருளத்துள் நீங்காது நின்று காப்பதுபோன்ற பல அற்புதங்களைக்கண்டு நாம் துயரகலலாம்.

மன்னுனவன் உலகிற்கொருமழையானவன்
பொன்னுனவன் உலகிற்கொரு மழையானவன்
என்னுனவன் இசையானவன் இளஞாயிற்றின் சோதி
அன்னுனவன் உறையுமிடம் ஆலந்துறையதுவே.

## புலவர்சிகாமணி வ. மு இரத்தினேஸ்வர ஐயர்

தேவாதிதேவர், சிவபிரானே என்பதும் பிறவும் மலரில் மலர்ந்துள. முதற்றிருமுறை திருஞானசம்பந்தர் அருளியதே. இரண்டாம் திருமுறையில் சிவபிரான் திருவருட்டிறனும் அடியாரது இடர்களை பண்பும் காணலாம். பூம்பாவைப் பதிகத்தில் ஆகம அர்ச்சனை விளக்கமும் சைவசமயிகளின் விசிட்டத் திருநாட்களின் பெரும்பேறுகளின் உயர்வும் இனிது போற்றற்பாலன. ஞானசம்பந்தப்பெருமானின் தேவாரப்பகுதி இரண்டாந்திருமுறையேயாகும்.

இந்த இரண்டாம் திருமுறை 122 பதிகங்களையுடையது. யசுர் வேதப் பொருள்நிறைந்து ஆன்மாக்கள் (மக்கள்) பிறவாப்பெருவாழ்வடையப் பெருமந்திரமாகப் பொலியும் ஸ்ரீருத்ரம்பஞ்சாட்சரத்தை நடுவே கொண்டுவிளங்கும் பஞ்சாட்சரமோகண்மணிபோன்றது. ''நம: சிவாயச சிவதராயச''* என்பதை திருஞானசம்பந்தப்பெருமான் இப்பதிகத்தில் போற்றியமை காணலாம். சுத்தாத்துவித சைவசித்தாந்தம் போதிக்கும் தடத்த-சொரூபத்திருமேனிகள் பரம்பொருளாகிய சிவபிரானுக்கு அருட்டிருமேனிகளென்பதைப்புகட்டும். சிவபரத்துவம் பிரமவிட்டுணுக்களை வருத்திய ஆலகாலவிடம் அருந்திய ஒன்றே போதிய உதாரணமாகும். பலசரித்திரங்களையும் பார்க்கலாம். தோத்திர ரூபசாத்திர ரூப அருட்பாசுரங்கள் பிறவிப்பிணிக்கு அமிழ்தமாகும். திருநீற்றுப்பதிகம், கோளறு பதிகங்கள் சைவசாதனைப் பெருமணிகளாகும். திருமுறைகளை மதியாதார் மதியிலாதாரே.

மூன்ரும் திருமுறையில் முன்னைய பாசுரப்பெருகொளிபோலவே மூன்ருந் திருமுறையும் திகழ்கின்றது. மக்கள் ஆன்ம நிலையும், சுதந்திரம் ஆன்மாக்களுக்கு இன்மையும் வெட்டவெளியாகக்காட்டும். அவ்வவ்வடியார்கள் தங்கள் தங்கள் நலம் பேணுது பின் எத்தனை யுகங்களாலும் அழியாது பயன்தரு பான்மையை மெஞ்ஞானவுணர்வு தலைப்பட அருளினர்கள் என்பது சூசிக்கப்பட்டன. சிவனடி

(5ம் பக்கம் பார்க்க)

# நாவலரும் சோதிடமும்

### நாவலர் பெருமை

நல்லை நகர் ஆறுமுக
நாவலர்
வந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே
சுருதியெங்கே-
எல்லவரும்
ஏத்துபுராணு கமங்கள்
எங்கேப்ரசங்க
மெங்கே
அத்தனறிவெங்கே அறை.
-பெரும்புலவர்
சி. வை. தாமோதரம்பிள்ளை.

★

கருள்விரவு தலைக்கழிக்
கழிக்குள்

### ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர் 7

கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவு ஐந்தெழுத்தும்
பொருளாகக் கொண்டுவப்போன்
தெருள்விரவு சுத்தசைவ
சித்தாந்தப் பெருஞ்செல்வன்
அருள் விரவு பரவு புகழ்
ஆறுமுகநாவலனே.
-மகாவித்துவான்
மீனுட்சி சுந்தரம்பிள்ளை

★

ஆரூரனில்லைப் புகலியர்
கோனில்லை
யப்பனில்லைச்
சீரூருமாணிக்கவாசக
னில்லைத்
திசையளந்த
பேரூறு மாறுமுகநாவல
னில்லைப்
பின்னிங்கியார்
நீரூரும் வேணியன்
மார்க்கத்தைப்
போதிக்கு நீர்மையரே.
-உடுப்பிட்டி
அ. சிவசம்புப் புலவர்

★

செந்தமிழுய்ய சைவத்
திருநெறி விளங்க
வந்தோன்
அந்தமில் கல்வி கேள்வி
யாழியைக் கடைந்து
நாளும்
தந்தனன் அமுத நூல்கள்
சாவில்லா வரத்தைப்
பெற்ருன்
நந்தமிழுள்ளமட்டும்
நாவல வாழ்க மாதோ.
-கவியோகி
சுத்தானந்தபாரதி.

மேலே கூறப்பட்ட செய்யுள்கள் ஐந்தாம் குரவர் மீது பேரன்பும் அளவு கடந்த மதிப்பும் நிறைந்த பெரும்புலவர்களால் பாடப்பெற்றவை.

நாவலர் பெருமான் வதரித்த திகதி -18-12-1822.

சிவபெருமான் திருவடி சேர்ந்த திகதி 5-12-1879.

அவர் தோன்றி இன்று 147 ஆண்டுகள் ஆகின்றன.

இறைவனடி சேர்ந்த ஆண்டுகள் அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலம் 57

## அறநெறிக் காவலர் முதலியார் செ. முத்துத்தம்பி

ஆண்டுகள். இதில் 35 ஆண்டுகள் சைவத்திற்கு, தமிழ் மொழிக்கு, தமிழ் சமூகத்திற்கு, தமிழ் நாட்டிற்கு அயராது உழைத்தார். அவரைப் போல உழைத்தவர்கள் ஒருவருமில்லை.


அவர் உயிரினும் மேலாக மானத்தைக் கவனித்தார். மானத்திற்கு ஈனமேற்படின் எந்த நிமிடமும் உயிரைவிட ஆயத்தமாக இருந்தார்.

### நாவலர் பெருமான் பரம்பரை

பாண்டிமழவன்குடி, கார்காத்த வேளாளன் வர்ணம். ஞானப்பிரகாச முனிவர் பரம்பரை.

இலங்கை காவல் முதலியார் மகன், பரமானந்தரின் புதல்வர், கந்தப்பிள்ளையின் குமாரர் ஆறுமுகநாவலர்.

### நாவலர் பெருமானின் சாதகம்




எங்கள் நாவலர் பெருமானுக்குச் சோதிடத்தில் நம்பிக்கையிருந்தது. அவர் சென்னையிலிருந்து தமது உறவினருக்கெழுதியகடிதங்கள் சிலவற்றில் தமக்கு அவ்வேளையில் நாளும் கோள்களும் நன்மையாக இருக்கவில்லையென்று குறிப்பிட்டிருந்தார். நாட்களும் கோள்களும் அவருக்கு ஒரு போதும் பெருந்தீங்கை விளைக்கவில்லை. அவர் முருகதாசனல்லா?

''நாளென் செயும்
வினைதான் என்செயும்
எனைநாடிவந்த
கோளென்செயும்
கொடுங்கூற்றென் செயும்
குமரேசரிருதாளும்
சிலம்பும் சதங்கையும் தண்டையும் கொண்டெனக்கு
முன்னே வந்து
தோன்றிடினே.

என்கிறது கந்தரலங்காரம். அவரைப்போலசேர். பொன் இராமநாத வள்ளலுக்கும் சோதிடத்தில் அதிக நம்பிக்கையிருந்தது. நல்லூர் தம்பையாக்குருக்கள் அவரின் அரண்மனைச் சோதிடராக நீண்டகாலம் கடமையாற்றிவந்திருக்கிருர். கோள்கள் பகைத்திருக்கும் காலங்களில் பல சாந்திகள் செய்திருக்கிருர். வள்ளல் நீண்டகாலம் ஒரு குறைவுமில்லாமல் உலகம் போற்றும் வகையில் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். சோதிடத்தைப் பற்றிப் பலரிடமும் பலதரப்பட்ட அபிப்பிராயமுண்டு. ஒருகடிகாரம்நேரத்தைக் காட்டுவது போல, சோதிடமும் ஊழ்வினை இன்ன காலத்தில் இனனபலனைக் கொடுக்கக்கூடுமென்று ஓரளவில் கூறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ம ய க் க ம்

என்ன காரணமோ தெரியவில்லை. அன்று 'யாழ் தேவி' மூன்றும் வகுப்புப் பெட்டியில் பிரயாணிகள் குறைவாகவே ஏறி இருந்தார்கள். ஆள் இல்லாத ஆசனமொன்றில் உடலைச் சாய்த்து கால்களை சுதந்திரமாக நீட்டிக்கொண்டு பாக்கட்டிலிருந்து சிகரட் ஒன்றினை எடுத்துப் பற்ற வைத்தேன்.

திறந்து கிடந்த யன்னல் வழியாக பெட்டிக்குள் ஊடுருவிப் பாயும் காற்றின் வேகத்தோடு அந்த ரயில் அவ்வப்போது விடும் நீண்ட பெருமூச்சின் இரைச்சலும் தொடர்ந்தாற்போல் அது தன் பற்களைக் கடித்துக் கொள்ளும் கடகடப்பு ஓசையும் என் காதில் விழுந்துகொண்டே இருந்தன.

நான் கண்களை இறுக மூடிக்கொண்டு குருட்டாம் போக்கில் எதை எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

இந்த ரயில் இருக்கிறதே, இதற்கு ஏழை-பணக்காரர், உயர்ந்தவர்- தாழ்ந்தவர், நல்லவர் - கெட்டவர் என்றெல்லாம் பேதம் கிடையாது. அந்தவகையில் இந்த ரயிலுக்கும் நாம் கோவிலில் சென்று வணங்கும் தெய்வத்திற்கும் வித்தியாசமில்லை. என்றாலும் இங்கும் முதல், இரண்டு, மூன்று என்று வகுப்புகள் பிரித்து வைத்து பெருமைப்பட்டுக் கொள்கிறோம்!

“பன்னீரன்”

ஏறுகிறவர்களை ஏற்றிக் கொண்டும், இறங்குகிறவர்களை இறக்கிவிட்டும் ஓடிக் கொண்டிருக்கும் இந்த ரயில் சமயம் வரும்போது, அந்தத் தெய்வத்தைப் போலவே பாகுபாடு காட்டாமல் தன்னை நம்பி வந்த அத்தனைபேரையும் எங்காவது படுகுழியில் தள்ளி விட்டு வேடிக்கை பார்க்கவும்தான் செய்கின்றது.

பெரிய சிந்தனையாளன் போல மனதுக்குள் இப்படி அலட்டிக்கொண்டு கிடக்கும் என்னை உலுக்கி எடுத்தது ஒருகுரல்.

“அப்பனே முருகா”

அனுதரவாக விடப்பட்ட குழந்தையொன்று தாயின் அரவணைப்புக்காக அங்கலாய்ப்பதுபோல் அக்குரல் என் காதுகளில் ஒலித்தது.

அதில் ஏதோ சக்தி இருக்கவேண்டும். அல்லது முன்னர் எங்கோ அதை தெய்வீகமானதொரு சூழ்நிலையில் நான் கேட்டிருக்கவேண்டும். இல்லையென்றால் அதைக் கேட்டதும் எனக்கு ஏன் இப்படியொருவித பயமும், பக்தியும், பதட்டமும் ஏற்படவேண்டும்...!

சட்டென எழுந்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டு பக்கத்து ஆசனத்தில் அமர்ந்துள்ள மனிதரைப் பார்க்கின்றேன். அவர் யன்னலின் ஊடாக வானத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

நெற்றியில் பட்டையாக விபூதி; அரையில் காவி படிந்த துண்டுவேட்டி; தோளில் ஒரு சால்வைத் துண்டு; கழுத்தில் உருத்திராக்க மாலைகள், மொட்டையடிக்கப்பட்ட தலையில் அப்பி விடப்பட்டுள்ள சந்தனக் குழம்பு பட்டையாகக் காய்ந்துபோய் இருக்கிறது. உதடுகள் அடிக்கடி குவிந்து முருக நாமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கின்றன.

“கந்தா...!”

“கடம்பா...!”

‘கதிரைமலையானே...;’’ எனக்கு ஞாபகம் வருகின்றது.......

அன்று கதிர்காமக் கந்தன் சந்நிதானத்தில் நெஞ்சம் நெக்குருகி கண்ணீராய் வழிந்தோட, குவிந்த கரங்களைச் சிரசின்மேல் உயர்த்தி கூவிக் கதறிக் கொண்டிருந்த அந்த உடுவம்...

ஆவேசம்கொண்டு ஆடுவோர், அக்கினிச் சட்டியைக் கையிலேந்தி வீதிவலம் வருவோர், உடலெல்லாம் வேல்பூட்டி பாதக்குறடு அணிந்து, காவடி எடுப்போர், பறவைக் காவடியில் பவனி வருவோர், தள்ளாத உடலையும் தரையில் கிடத்தி அங்கம் புரள்வோர் - இப்படியான காட்சிகள் யாவும் வருடாவருடம் அங்கு சாதாரணமாக நடைபெறுபவை. அவைகளைப் பார்த்தும் பார்க்காமல் கோவிலுக்குள் பிரவேசிக்கத் திரளுகின்ற அடியார் திருக்கூட்டம், கோவில் முன்றலில் நின்று கூவிக் கதறிக்கொண்டிருந்த மனிதரைப் பார்த்ததும் அங்கேயே ஸ்தம்பித்து நின்றது.

“யார் இவர், இவர் யார்?” — எங்கும் ஒரே கேள்வி.

“இவர் ஒரு யோகி, கதிர்காமக் காட்டிலேதான் வாசம்.”

—கூட்டத்தில் ஒருவர் பதில் சொன்னார்.

“பக்தி என்றால் இதுவல்லவா பக்தி! எவ்வளவு நேரமாக இப்படித் தன்னை மறந்து பாடிக்கொண்டிருக்கிறார்.”

ஆச்சரியப்பட்டவர்களுக்கு அளவில்லை.

“இவர் இமயமலையிலிருந்து வருகிறார். எப்படி வருகிறார்; எப்படிப் போகிறார் என்பது எவருக்கும் தெரியாது‘’

தெய்வ சந்நிதானத்திலும்கூட அண்டப்புளுகு ஒன்றினை அவிழ்த்து விட்டார், ஓர் அன்பர்.

இத்தனைக்கும் அந்த மனிதர் அற்புதங்கள் எதையும் நிகழ்த்தவுமில்லை. ஆவேசங்கொண்டு அரற்றவுமில்லை. ஆனால் அவர் முகத்தில் தேஜஸ் நிறைந்த தெய்வீகக்களை வீசியது! கண்களில் ஒளி ததும்பி வழிந்தது.

அந்த மனிதரின் தெய்வத்தன்மையில் தன்வசமிழந்துவிட்ட ஒரு வயோதிப மாது அவர் காலில் விழுந்து வணங்கினார். அவரைத் தொடர்ந்து கும்பல் கும்பலாக ஆட்டு மந்தைகளைப்போல் அங்கு குழுமியிருந்த சனக்கூட்டம் அந்த மனிதரின் கால்களில் விழுந்து வணங்க ஆரம்பித்தது.

“சாமி, சாமி, என் காலில் விழாதையுங்கோ. அதோ நமக்கெல்லாம் மேலானவன். என் அப்பன் அங்கே இருக்கிறான் அவனைப்போய் கும்பிடுங்கோ’’

அதிர்ச்சியுற்ற அவர், அந்த மனிதர்களைப் பார்த்துக் கத்தினார். பின்னர் “முருகா, என்னை ஏனையா இப்படிக் சோதிக்கிறாய்’’ என்று கதறியபடி கோவில் முன்றலில் விழுந்து புரளத் தொடங்கினார். ஆனால் பக்தகோடிகள் விடுவதாய் இல்லை. நீ முந்தி நான் முந்தியென்று போட்டி போட்டுக்கொண்டு அவர் புரண்ட புழுதியில் தங்கள் உடல்களையும் பதித்து புனிதமாக்கிக் கொள்வதற்காக தாங்களும் விழுந்து புரளத் தொடங்கினார்கள். அவர் நின்றிருந்த இடத்தில் புனிதமான பொருளை எடுப்பதுபோல் புழுதியைப் பெயர்த்து அள்ளி சேலைத்தலைப்புகளில் முடிந்துகொண்டார்கள் பெண்களில் பலர். அதனால் அந்த இடத்தில் பெரிய குழியொன்றே ஏற்பட்டுவிட்டது.

○

“அப்பனே முருகா’’ ஆகாயத்தை நோக்கியபடி அவர் குரல் எழுப்புகிறார்.

“சாமி கதிர்காமம் போய் வருகிறீர்கள் போலிருக்கிறது.’’ நான் மிகவும் வினயமாக அவரிடம் பேச்சுக் கொடுக்கிறேன். “ஓம் தம்பி.’’ பதில் சொல்கிறார் அந்த யாழ்ப்பாணத்தவர்.

‘ஓம்’ என்ற சொல்லே என்னை ஒருதடவை உலுக்கி எடுத்து உடலைப் புல்லரிக்கச் செய்கிறது.

‘கதிர்காமத்திலே நானும் உங்களைப் பார்த்தேன். அப்போ நீங்க தாடி வளர்த்திருந்ததாக ஞாபகம்’’

“ஓம் தம்பி’’

மீண்டும் எனக்கு உடம்பு புல்லரித்து விடுகின்றது. அவர் என்னைப் பார்க்கிறார். கண்களில் ஒளி ததும்பி நிற்கின்றது. முகத்தில் தெய்வக்களை வீசுகின்றது.

“ஆறுமாசம் கதிர்காமத்திலே தங்கி விரதம் இருந்து நேர்த்திக்கடன் தீர்த்துக்கொண்டு வாறன். வீட்டிற்குப் போற எனக்கு தாடியும் சடையும் என்னத்திற்கு. கதிரைமலையிலேயே மொட்டையடிச்சுப் போட்டு வாறன். முருகா’’ அவர் பேச்சை நிறுத்திக் கொண்டு வானவெளியை வெறித்துப் பார்க்கத் தொடங்கி விட்டார். ரயில் ஓட்டத்தினால் ஏற்படும் சுருதித் தாளத்திற்கு ஏற்றாற்போல் திருப்புகழ் பாட்டின் ஓசை எழத் தொடங்கி விட்டது.

○

யாழ்ப்பாணத்திற்கு நான் வந்து ஒரு வாரத்திற்கு மேலாகி விட்டது, ஊருக்குத் திரும்புவதற்கான ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கிறேன். நண்பன் கட்டாயப்படுத்தி எங்கோ அழைக்கிறான்.

“என்னடா இவ்வளவு தூரம் வந்த நீ அதன்ர ‘டேஸ்டை’ ஒருக்கா பார்க்காமல் போறன் என்கிறாயே பேயா!’’ என்று உரிமையோடு கடிந்துகொள்கிறான் அவன்.

நல்லதோ கெட்டதோ நண்பனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கம் எனக்கு இல்லாவிட்டாலும் அப்படி என்னதான் இந்தச் சரக்கில் விசேஷமாக இருக்கிறது என்று பார்த்துவிடு

(4-ம் பக்கம் பார்க்க)

பொன்னும் பொருளு எள்ளறதும் எவ்வளவு அ

# என் மகனே ஒரு கேள்வி

—புலவர் ம. பார்வதிநாதசிவம்

கல்வியினால் நீ உயர்ந்தாய் என்ற செய்தி
காதார நான் கேட்டேன்! மணம் என்கின்ற
நல்வாழ்வு நீபெற்ற சிறந்த நாளில்
மனம் இன்பக்கடல் ஆனேன்! மக்கள் என்னும்
செல்வத்தால் நீ பொலிந்தாய்! மகிழ்ந்தேன்! இந்தச்
செகத்தினில் நீ பெறற்கரிய யாவும் பெற்றே
நல்வினையின் பயன் பெற்ற உயிரே போன்று
நாள்தோறும் சிறந்து யர்ந்தாய் உவந்தேன்! வாழி!

இவ்வுலகில் நீ பிறந்தாய்! கற்றாய்! செல்வம்
ஈட்டினாய்! புகழ் பெற்றாய்! எனினும் உன்னால்
இவ்வுலகம் ஏதேனும் பெற்றதுண்டா?
என்னுமொரு, கேள்வியை நீ கேட்ட துண்டா?
வெவ்வினைக்கே ஆளாகிப் பசித்தீயாலே
வெந்துநிதம் சாவோர்கள் நோய் என்கின்ற
தெவ்வரினால் அழிவோர்கள் இவர்கள் பற்றிச்
சிறிதேனும் என்றேனும் நினைத்ததுண்டா?

பாவலரும் காவலரும் உயிரை ஈந்தே
பல்காலும் வளர்த்துவர அதனைக் கண்டே
தேவர்களும் விழைகின்ற சிறப்புப் பெற்ற
தெய்வத்தை! நம்தாயைத்! தமிழை! இன்று
காவல்முறை அறியாதோர் காக்க எண்ணிக்
கருத்தொன்றாய்ச் செயலொன்றாய் அலையுங்காலை
ஆவலுடன் தமிழ்வளர என்ன செய்தாய்!
அதுபற்றிச் சிறிதேனும் நினைத்ததுண்டா?

# ஒரு தொழிலாளியின் மனைவி

“அம்மா வீட்டுக்குப் போய் இரு நாட்கள் நின்று வரட்டுமா?’’

‘தாராளமாகப் போய்வா. உன் உடல் நிலை தேறுவதற்கு நீ போய்த்தான் வரவேண்டும்.”

முகத்தைத் திருப்பிக் கொண்டே தன் கசங்கிய ஷேர்ட்டைச் சரிப்படுத்தும் பாவனையில் பதில் கூறிவிட்டான் அவன். ஆனால் அவளை தாய் வீட்டுக்கு அனுப்பிவிடுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

தொழிலாளியான அவனுக்கு மனம் தாராளமாக இருக்கிறது. ஆனால்......

தொடர்ந்து சில நாட்களாக அவள் இந்தக் கேள்வியைக் கேட்டு வருகிறாள். அவன் பதிலும் கொடுத்துவிட்டான். பின் ஏன் தயக்கம்?

அவளது தாய் வீடு பக்கத்திலில்லை. பதினைந்து மைல் தொலைவிலிருக்கிறது. இந்தத் தொலைவுதான் தாமதத்துக்குக் காரணம்.

வறுமையில் செம்மையென்று அவனுடன் வாழ வந்தவள் அவள்.

வயது வந்த பெண்ணை

குழந்தையின் மேல் அவளது வெறுங்கை அணைத்துக் கொண்டிருந்தது. அவளது கையை அணைத்துவிளையாடிய அந்த தங்கக் காப்புகள் அங்கே இல்லை. தாலிக் கொடியைப் பற்றிக்கொண்டிருந்தது மற்றக் குழந்தை, அவள் போட்டிருந்த தங்கச் சங்கிலி?...... திருடப்படவில்லை. விற்பனையான திகதி மட்டும் அவனுக்கு மறந்துவிட்டது என்பது உண்மை. ‘மூக்குத்தி இல்லாதிருப்பது தான் தற்கால நாகரீகம்’. தான் நல்லபடியாக உடுக்க முடியாதவன் அதற்கும் ஏதோ காரணம் சொல்லி பிறரை கெட்டித்தனமாக ஏமாற்றிவடுவதுபோல் தன்னைத்தானே ஒருமுறை அவன் ஏமாற்றிக்கொண்டான். கலைந்து கிடந்த

வனுக்காக கார் ஏன் பிரேக் பிடிக்க வேண்டும்’ என்று அவன் நினைக்கும் பொழுது அவனுக்கு சிரிப்பு வராமலிருக்குமா?

தொழிலாளியின் கூக்குரல் அவனுக்குமட்டும்தான் தெளிவாகக் கேட்கிறது. பிறருக்கு அது கேட்பதில்லை. கேட்கவைக்க அவனுக்குச் சக்தியேது? இதைமட்டும் அவன் நன்கு உணர்கின்றான்.

கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டேயிருக்கும் கும்பலில் அங்கத்தவனான அவன் தனது மனைவியின் சாதாரண கோரிக்கையைக்கூட நிறைவேற்ற முடியவில்லை. தோல்வியின் பெருமூச்சு அந்த சின்ன வீட்டின் காற்றோடு கலக்கி

காட்சி— 5

அந்தத் தெய்வத்தைப் போலவே பாகுபாடு காட்டாமல் தன்னை நம்பி வந்த அத்தனைபேரையும் எங்கா

முருக நாமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கின்றன.

''கந்தா...!''

''கடம்பா...!''

ஒன்றினை அவிழ்த்து விட்டார், ஓர் அன்பர்.

இத்தனைக்கும் அந்த மனிதர் அற்புதங்கள் எதையும்

ர்த்து அள்ளி சேலைத்தலைப்புகளில் முடிந்துகொண்டார்கள் பெண்களில் பலர். அதனால் அந்த இடத்தில்

அப்படி என்னதான் இந்தச் சரக்கில் விசேஷமாக இருக்கிறது என்று பார்த்துவிடு

(4-ம் பக்கம் பார்க்க)

# தீந்தமிழ்த் தீ

## நாடகம்

### காட்சி— 5

(அரசவை அமைச்சர், பிரதானியர், நக்கீரர், வீரர்கள் இருக்கின்றனர். நெடுஞ்செழியனும் கோப்பெருந்தேவியும் சிம்மாசனத்தில் இருக்கிறார்கள்.)

நெடுஞ்செழி:- தலையாலங்காலத்துப் பெரும் போரிலே வெற்றிவாகை சூடியதை இங்கே விழாவாகக் கொண்டாடுகிறோம். உயிரைத் துச்சமென மதித்து அச்சமெதுவுமின்றி, அடலேறுகளாய் களத்தில் குதித்த பாண்டி நாட்டு வீரர்கள்தான் இப்பெரும் வெற்றியை ஈட்டித் தந்தார்கள். போரிலே உயிர் நீத்த செம்மல்களுக்கு எனது தலை தாழ்த்தி வீர வணக்கம் செலுத்துகின்றேன். அன்னாரது குடும்பங்களுக்குச் சன்மானம் வழங்கப்படும். நெற்றியிலும், நெஞ்சிலும் மற்றும் உடலின் முற்புறத்திலும் விழுப்புண்பட்ட வீரர்களுக்கு விருதுகளும், பரிசுகளும், பதக்கங்களும் அளிக்கப்படும். அமைச்சரே, பரிசு பெறும் வீரர்களின் பட்டியலைப் படித்திடுக.

அமைச்சர்:- படை பல நடத்தி எதிரிகளின் தடை பல உடைத்துப் பாண்டி மண்டலத்திற்குப் புகழ் ஈட்டித் தந்த தானைத்தலைவன் வீரவேங்கை-மாவீரன் என்ற பட்டத்தையும் பரிசையும் பெறுகின்றார்.

யானைப் படையை எதிர்த்து யானைகளின் துதிக்கைகளை வெட்டி வீழ்த்திப் போராடும்போது நெற்றியில் விழுப்புண்பட்ட அடலேறு அழகப்பன் பதக்கமும் பாராட்டும் பெறுகின்றான்.

மார்பில் பாய்ந்த வேலைத் திருகியெடுத்துக் குறிதப்பாது திருப்பி எறிந்து பகைவன் உயிரைக் குடித்த மறவர்குலதிலகம் மணிமாறன் பரிசும் பாராட்டும் பெறுகிறான். களத்திலே கர்ச்சனை புரிந்து எதிரிகளை வெட்டி வீழ்த்திய ஏந்தல் மாமல்லன் பரிசும் பதக்கமும் பெறுகின்றார்.

நெடுஞ்செழி:- தலையாலங்காலத்துப் போரில் உறுதுணையாயிருந்து வெற்றியீட்டித்தந்த தானைத்தலைவன் மாவீரன் வீரவேங்கையையும் மற்றும் வீரர்களையும் மீண்டும் பாராட்டுகின்றேன். வெற்றி விழாக் கொண்டாடும் இந்த நன்னாளில் இலக்கியத்துக்கும் உயர்ந்த பரிசு வழங்க எண்ணியுள்ளேன். இவ்வாண்டு புலவர்களால் இயற்றப்பட்டு அரங்கேற்றப்பட்ட பாட்டுகளில் நெடுநல்வாடையே சிறந்த பாட்டு எனத் தமிழ்ச் சங்கம் கருதுவதால் அப்பாட்டை இயற்றிய தமிழ்ச்சங்கத் தலைவர் நக்கீரருக்குப் பத்தாயிரம் பொன் பரிசாக வழங்குகின்றேன்.

நக்கீரர்;- மன்னர் மன்னவா! கவிதை உள்ளம் படைத்த கலைக்காவலர் ஆழ்ந்து, அகன்ற, நுண்ணிய அறிவு கொண்டு ஆட்சி புரியும் அரசர்க்கரசே! அறம் வழுவா, நெறி தவறா நினது செங்கோலாட்சி நீடு வாழ்க! மக்கள் என்றும் இன்பம் பெறுக!

நெடுஞ்செழி:- இந்நன்னாளிலே எனது நெடுநாளைய ஆசையொன்றினை வெளியிட விரும்புகிறேன். யான் சொல்லப்போகும் அகப்பொருளைக் கருவாகவைத்து மிகச் சிறந்த பாட்டு இயற்றுவோருக்கு இப்பொற்கிழி பரிசாக வழங்கப்படும். அமைச்சரே! இப்பொற்கிழியைத் தமிழ்ச் சங்க மண்டபத்திலே கட்டி தொங்கவிட வேண்டும்.

அமைச்சர்:- தங்கள் சித்தப்படியே ஆவன செய்கின்றேன், மன்னர் மன்னவா!

நெடுஞ்செழி:- பாட்டில் அமைக்கப்பட வேண்டிய பொருளை இதோ சொல்கிறேன்.

தலைவன் ஒருத்தன் தலைவியொருத்தியுடன் பூம்பொழிலில் உலாவரும்போது காற்றுடன் கலந்து கமழ்ந்து வந்த மணம் அவனைக் கவர்ந்தது. உடனே அவனது உள்ளத்தில் ஓர் ஐயவினா தோன்றிற்று. அம்மணம் மலர்களிலிருந்து வீசிய நறுமணமா? அல்லது தலைவியான மங்கை நல்லாளின் கூந்தலிலிருந்து வீசிய நறுமணமா என்று. இந்தப் பொருளை உள்ளடக்கி வினாவுக்கு விடையாகப் பாட்டை இரு திங்களுக்குள் இயற்ற வேண்டும். அகப்பொருள் இலக்கணத்துக்கு இசையப் பாட்டு இயற்றப்பட வேண்டும். சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மர் தவிர்ந்த மற்றைய கவிதை இயற்றும் ஆற்றலுள்ள அத்தனைபேரும் போட்டியிற் கலந்துகொள்ளலாம். அமைச்சரே! இச்செய்தியைநாட்டு மக்கள் அனைவர்க்கும் தெரியப்படுத்தவும்.

### காட்சி 6

(மதுரை நகரத்து வீதி. கொண்டானும் அவன் நண்பன் உண்டானும் வருகின்றனர்.

உண்டான்: குருதேவா! சந்தோஷமான செய்தியொன்று தங்களுக்குக்கூறப் போகிறேன்.

கொண்டான்: சும்மா அலட்டாதே.

உண்டான்: சுவாமியின் சிந்தனையை அடியேன் குழப்பவில்லை. பொன்னும், பொருளும் சம்பாதிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம். அவ்வளவுதான்.

கொண்டான்: பொன்னும் பொருளுமா. சொல்லடா சொல்லு உண்டான். சீக்கிரம் சொல்லு.

உண்டான்: பார்த்தீர்களா? பார்த்தீர்களா? பொன்னும் பொருளும் என்றதும் எவ்வளவு அவசரம் உங்களுக்கு.

கொண்டான்; தாமதிக்காதே. உம் சொல்லு. பொன்னும்பொருளும்தேட அரிய சந்தர்ப்பம்என்றாயே!

உண்டான்: குருதேவா! மன்னர் மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் விரும்பும் காதல்பாட்டை இயற்றிக்கொடுத்துச் சிறந்த பாட்டாகத் தமிழ்ச்சங்கம் கருதினால் 10 ஆயிரம் பொன் கொண்ட பொற்கிழி பரிசாம். தாங்களும்

**''கரவை கிழார்''**

பாட்டுப்போட்டியிற் கலந்து கொண்டால் பொன்னும் பொருளும் கிடைக்குமல்லவா?

கொண்டான் கொண்டான் எனக்கு வாய்த்த சிறந்த சிஷ்யனும் உண்டானே! உடனேயே ஒரு பாட்டுப்பாடி அரசனிடம் கொண்டுசெல்லப் போகிறேன்.

உண்டான்:- அடியேனுக்கு ஒரு சந்தேகம்.

கொண்டான்:- என்னப்பனே சந்தேகம்? கேள் அப்பனே கேள். பாட்டியற்றும் ஆற்றல் எனக்கில்லையென்றா நினைக்கிறாய்.

உண்டான்:- தமிழையும் ஆரியத்தையும் கரைகண்டவராச்சே தாங்கள். தங்களுக்கு ஆற்றலில்லையென்று அடியேன் எண்ணுவேனா? தப்பு தப்பு ஆனால்...

கொண்டான்:- ஆனால் என்று இழுக்காதே, ஆசையால் என்று சொல்லி வசனத்தை முடித்துவிடு.

உண்டான்;- குருதேவா! தமிழ்தீது என்பதுதானே தங்கள் கொள்கை. தீதான தமிழ் மொழியில் பாட்டுப் பாடி பொற்கிழி பெற எப்படிச் சுவாமி தங்களுக்கு மனம் இசைந்தது. முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறதே தங்கள் கொள்கை.

கொண்டான்:- வாயை மூடடா உண்டான். எனது கொள்கையைப்பற்றி உனக்கென்ன கவலை. இலாபம் தான் என் குறிக்கோள். எந்தக் குறுக்கு வழியிலும் பணம் தேட வேண்டியது தானே.

(4ம் பக்கம் பார்க்க)


# தம்பி அன் கோ.,

284, K K. S ரேட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

இந்த மாதிரி 10 விளம்பரம் தருபவர்க்கு ஒரு சுவீப் ரிக்கற் இனமாகக் கொடுக்கப்படும்.


அவளது தாய் வீடு பக்கத்திலில்லை. பதினைந்து மைல் தொலைவிலிருக்கிறது. இந்தத் தொலைவுதான் தாமதத்துக்குக் காரணம்.

வறுமையில் செம்மையென்று அவனுடன் வாழ வந்தவள் அவள்.

வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற தமிழர் பாரம்பரிய மரபு காரணமாக அவள் அவன்மீது கட்டி வைக்கப்பட்டாளேயானாலும் மரபுக்குரித்தான மானத்துடன்தான் வந்திருந்தாள். குமர் கரைசேர்ந்த மன அமைதியுடன் ஒருநாள் அவள் தந்தை நிரந்தர அமைதியைத் தேடிக்கொண்டார். இதற்குப்பின் அவளுக்கு தாயும் தந்தையும் எல்லாமே தாய்தான். இந்த தாயிடம்தான் ஆறுதலுக்காகச் செல்வதற்கு இரு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் கணவனிடம் விடை கேட்டிருந்தாள். தடையில்லாத விடை கிடைத்துவிட்டது. ஆனால் எப்படிச் செல்வது?

அவன் வீடுவரும் நேரத்துக்கும் இரவுக்கும் வெகு தூரம் இருப்பதில்லை.

கணவனுக்கு தனது பணிவிடைகளைச் செய்தாகிவிட்டது என்ற ஆறுதலில் ஒரு கட்டிலில் தனது நான்கு குழந்தைகளை வளர்த்திக் கொண்டே, அவர்கள் நீட்டி நிமிர்ந்து கிடந்த இடம் போக மிகுதியில் தான் இடம் தேடிக்கொண்டாள் அவள். கணவன் களைப்பில் படுத்துறங்குவான். அந்த அயர்ந்த நித்திரையைப்பிள்ளைகள் குழப்பிவிட்டால்? ......... அதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

அந்த அன்னையின் அணைப்பில் அவர்கள் ஏதோ சுகம், ஆறுதல் கண்டுகொண்டிருக்கவேண்டும். அதற்காகத்தான் அவ்வளவு நெருக்கமாக அவளை அணைத்துக் கொண்டிருக்கிறார்களா? 'தாயின் அணைப்பு -அந்த மிருதுத்தன்மைக்கு இந்த உலகமே ஈடாகுமா? உலகப் பிணைப்புக்கே அவள்தானே முதல் காரணம்'- ஏதோ ஒரு அனுபவ சித்தாந்தம் அவன் கண்களை ஈரமாக்குகின்றன.

அவன் இரவில் நல்ல நித்திரை செய்வதாக அவளது எண்ணம்.

அவள் நித்திரை செய்துவிட்டாளா என்று கட்டிலைத் திரும்பிப் பார்த்தபொழுது அவன் கண்ட காட்சிதான் இது.

தொழிலாளியை விட அவளுக்குக் களைப்பு அதிகமா? அவள் நித்திரையாகித்தானிருக்கிறாள்.

தான் தற்கால நாகரீகம்'. தான் நல்லபடியாக உடுக்க முடியாதவன் அதற்கும் ஏதோ காரணம் சொல்லி பிறரை கெட்டித்தனமாக ஏமாற்றிவருவதுபோல் தன்னைத்தானே ஒருமுறை அவன் ஏமாற்றிக்கொண்டான். கலைந்து கிடந்த கேசத்தைக் கூட ஒதுக்க நேரமில்லாமல் அப்படியே நித்திரை செய்துகொண்டிருந்தாள் அவள்.

கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டேயிருக்கும் கும்பலில் அங்கத்தவனான அவன் தனது மனைவியின் சாதாரண கோரிக்கையைக்கூட நிறைவேற்ற முடியவில்லை. தோல்வியின் பெருமூச்சு அந்த சின்ன வீட்டின் காற்றோடு கலக்கிறது.

'கணவனைக்கஷ்டப்படுத்திவிடாதேயம்மா'-என்று திரு

## க. கணேசலிங்கம்

தனது கனவை விழித்துக் கொண்டே தொடர்கிறான் அவன்.

அவளது சேலை? நாளாந்தம், 'அவன் காரியாலத்திற்கு அந்தப் புடவைக் கடைப் பக்கத்தால்தான் செல்ல வேண்டும். எத்தனை வர்ணச் சேலைகள் கொடிகளாகப் பறக்கும். அந்தச் சித்திர வர்ணச் சேலைகளெல்லாம் அவனது சிந்தனையை எப்படியெல்லாமோ குலைக்கும். இப்படிச் செல்லும்பொழுது பல தடவைகளில் 'தெருவைப் பார்த்துச் செல்ல முடியாதா?' என்று கடும் பிரேக்குடன் அவன் முன்னால் நிற்கும் காரோட்டிகள் கேட்டுவிட்டுச் செல்வது அவனுக்குச் சிரிப்பைத்தான் வரவழைக்கும். 'ஒரு நல்ல சேலையையாவது வாங்கிக்கொடுக்க முடியாத

மணத்துக்கு முன்னால் முதியவர்களால் செய்யப்பட்ட நடுத்தர குடும்பத்தின் வழி வந்த போதனையை அவள் எட்டுவருடங்களுக்கு மேலாகக் கடைப்பிடித்து வருவதென்றால் அதன்பொருள் பொறுமையா? கடமையா? இப்படி அவள் சித்திரவதைப்படுவதற்குப் பெயர் என்ன?

வேலையின் சுமை அவனது கண்களை மூடவைக்கிறது; வேதனையின்சுமை திறந்துகொண்டிருக்கத் தூண்டுகிறது.

முதுகுப் புறத்தில் மெல்லீசாகக் கிழிந்த அவளது சட்டையினூடாக அவளது உடலின் கவனிப்பின்மையும்தெரிகிறது. எத்தனையோ விஷயங்களை போர்த்து மூடி குடும்பகௌரவத்தை நிலை

(4-ம் பக்கம் பார்க்க)

# நமது நூல் நிலையம்

**எழில்:** (விஞ்ஞான, கலை, இலக்கிய மாத இதழ்) பெப்ரவரி 1969. கிடைக்குமிடம்: 522, காலி வீதி, கட்டுப்பெத்தை, மொறட்டுவை.

'எழில்' முதலிதழ் விஞ்ஞான, கலை, இலக்கியக்கட்டுரைகள் தாங்கி வெளிவந்துள்ளது. தமிழில்அறிவியல் அறிவு வளர இது போன்ற சஞ்சிகைகளை தமிழ் அன்னை வேண்டி நிற்கிறாள்.

**திருமால் பெருமை:** ஆசிரியர்: க. வை. ஆத்மநாத சர்மா, விலை சதம்: 50.

திருமால் பதிகம் திருக்கேதீசுவர ஆலய பரிவார மூர்த்தியாகிய ஸ்ரீ தேவி புடை சூழக்கோவில் கொண்டு வீற்றிருந்தருளும் பெருமான்மீது பாடப்பட்டது திப்பாமாலையாகும். இதனை திருமதி வாலாம்பிகை அம்மாள் சிவசுப்பிரமணியத்தின் ஞாபகார்த்தமாக திரு. க. வை. ஆத்மநாதசர்மா இயற்றியுள்ளார்.

**நுட்பம் 1968:** ஆசிரியர் மாவை நித்தியானந்தன், வெளியீடு: தமிழ் மன்றம், இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலை, கட்டுபெத்தை.

கட்டுபெத்தை தொழில் நுட்பக்கல்லூரியின் 'நுட்பம்' முதலிதழ் வரப்பெற்றோம். தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களின் கலை, இலக்கிய அறிவியல் ஆர்வத்தினை இச்சஞ்சிகை நன்றாகப் பிரதிபலிக்கிறது.

**அனலையின் அருஞ்செல்வர்:** ஆசிரியர்: கவிஞர் இ. நாகராசன், கிடைக்குமிடம்: தமிழரசிப் பதிப்பகம், 2 ஏ, கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

அனலைதீவு சதாசிவ உயர்நிலைப்பள்ளியில் கால் நூற்றாண்டுகளாக பணியாற்றிய திரு. அ. சிவபாதசுந்தரத்தின் சேவை நலத்தை கவிஞர் இ. நாகராஜன் கவிதையால் பாராட்டியுள்ளார். அக்கவிதை இந் நூலாக வெளிவந்துள்ளது.

—பூரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீந்தமிழ்த் தீ

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

உண்டான்:- சுவாமி, தங்கள் கூர்மையான மூளையை எப்படிப் பாராட்டுவது. நெல்லுக்கூடுக்கு ஒப்பிடட்டுமா? அல்லது பாவையரின் பல்லுக்கூடுக்கு ஒப்பிடட்டுமா?

கொண்டான்:- உண்டான் நீ அதிகப் பிரசங்கியாகி விட்டாய். பேச்சை வளர்க்காதே. பாட்டை இயற்றுவோம்.

உண்டான்:- தாங்கள் பாடுங்கள் சுவாமி. நான் ஏட்டில் எழுதிக் கொள்கிறேன்.

கொண்டான்:- (சிந்தித்து விட்டு)

,ஆகாயச் சந்திரனுக்கு
அடுத்துப் பிறந்தவளே.
அனல் தெறிக்கும
கயறகண்ணில்
புனல் பொங்கும்
பாவையே!

உண்டான்:- ஏன் சுவாமி நிறுத்தி விட்டீர்கள்?

(மேற்கொண்டு பாடமுடியாமல் தவிக்கிறார்)

உண்டான்:- கற்பனை தங்களை காலை வாரிவிட்டதா, சுவாமி.

கொண்டான்:- கிண்டல் பண்ணுதேயடா உண்டான், நாளைககாலையில் இந்தப் பாட்டு பூரணததுவம் பெற்றுவிடும்.

உண்டான்:- சுவாமியின் ஆசை நிறைவேற வேண்டும். பாட்டுக்குப் பரிசு கிடைத்தால்...... இந்த சுஷ்யனையும் ஞாபகத்தில வைத்துக் கொள்ளுங்கள்.

கொண்டான்:- குருவுக்கும் சிஷ்யனுக்கும் ஒடு குறிக்கோளில் மட்டும் மிகுந்த ஒற்றுமை உண்டடா உண்டான். அதுதான் ஆசை.

## காட்சி-7

(தமிழ்ச் சங்கம். மன்னன் நெடுஞ்செழியன் வீற்றிருக்கிறான். சங்கப் பலகையில் நக்கீரர் முதலானோர் வீற்றிருக்கின்றனர்.)

நெடுஞ்செழியன்:- நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த புலவர் பெருமக்களே! யான் முன்பு தெரிவித்த அகப்பொருள் பற்றிய பாட்டொன்றை தருமி என்னும் அந்தணன் இந்தச் சங்கத்தில் அரங்கேற்றி தகுதியுடையதானால் பொற்கிழியைப் பெற்றுவிட விரும்புகிறான். யாரங்கே! (காவலன் வருதல்) தருமியை அழைத்து வாருங்கள்.

தருமி:-மன்னர் மன்னரே! சங்கத்துச் சான்றோர்களே! உங்களனைவர்க்கும் எனது ரப் பாட்டு இயற்றப்பட்டுள்ளது. எனது உள்ளத்தைக் கவர்ந்த உயர்ந்த பாட்டு. புலவர்களே உங்கள் கருத்து என்ன என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

கபிலன்:- ஆழ்ந்த உணர்வு நிரம்பிய சிறந்த குறிஞ்சிப் பாடல்.

பரணர்:- எனது கருத்தும் அதுவே. அருமையான பாடல்.

நெடுஞ்செழி:- சங்கத் தலைமைத் தமிழ்ப் புலவர் நக்கீரர் அவர்களே! தங்கள் கருத்து யாதோ?

நக்கீரர்:- குறிஞ்சிக்கோர் கபிலர் எனும் சிறப்புப் பெயர் பெற்ற செந்நாப் புலவரே பாராட்டும்போது யான் பாராட்டாதிருக்க முடியுமா?

நெடுஞ்செழி:- தருமி பொற்கிழியைப் பெறலாம்.

நக்கீரர்:- ஆனால் பொற்கிழியை அளிக்குமுன் பாட்டை இயற்றியவரிடம் ஒரு வினவுக்கு விடை கேட்க விரும்புகிறேன்.

நெடுஞ்செழியன்:- தமிழ்ச் சங்கத்திலே எனது அனுமதிக்குத் தாங்கள் காத்திருக்கத் தேவையில்லை. தாங்கள் தாராளமாகத் தருமியிடம் வினவுக்கு விடை கேட்கலாம்.

நக்கீரர்:- தருமி அவர்களே! பாட்டில் நறிய மணம் பற்றி நவின்றிருக்கின்றீர். அழகிய கூந்தலின் மணம் இயற்கையானதா- செயற்கையானதா? அரிவை கூந்தலின் நறியவும்உளவோ நீ அறியும் பூவே-என்ற அடிக்கு நீர் கருதிய பொருள் என்ன?

தருமி:- (விழிக்கின்றான்)

நெடுஞ்செழியன்:- ஏன் மௌனம் சாதிக்கின்றீர்?

நெடுஞ்செழியன்:- இந்தப் பாட்டை நீர் இயற்றவில்லையா? நீர் இயற்றவில்லையானால் இயற்றியவர் யார்?

தருமி:- மன்னர் மன்னனே! சங்கச் சான்றோர்களே! என்னைப் பொறுத்தருள்க. வறுமையால் வாடித் துன்பற்ற எனது அவலநிலையைக் கண்ணுற்ற இறையனார் இந்தப் பாட்டை இயற்றி என்னிடம் தந்தார். தமிழ்ச் சங்கத்தில் பாட்டை அரங்கேற்றினால் பொற்கிழி பரிசாகக் கிடைக்கும் எனவும் கூறினார்.

நெடுஞ்செழியன்:- இறையனாரா? அவரை இங்கே அழைத்துவர முடியுமா?

தருமி:- அவகாசம் தாருங்கள் அழைத்து வருகிறேன்.

## தமிழக முதல்வரின் "துளிவிஷம்"

சேரம் கலைமன்றம் அளிக்கும் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி எழுதிய "துளி விஷம்" என்னும் சமூக சீர்திருத்த நாடகம் இன்று மாலை கொழும்பு ஹாவ்லொக்டவுண் லும்பினி அரங்கில் திரு. வி. சுந்தரலிங்கம் தலைமையில் மேடையேறவிருக்கிறது. எஸ். சந்தானலட்சுமி, ரி. கே. எம். மர்லியா. செல்வி வண்ணமலர், சித்தி முஜிரா ஆகியோரும் குணசித்திர நடிகர் பீ. ஏ. மோகன், பழனி, அமரிபூ. பி. மகாராஜா, பி. தியாகராஜா. பி. கந்தையா, எஸ். சந்தனம், எஸ். மாணிக்கம். கே. வேலாயுதம் ஆகியோரும் பாகமேற்று நடிக்கின்றனர்.

## தேவருக்கே சொந்தம்!

சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பாதேவர் தனது படங்களை வெளியிடும் அழகே ஒடு தனி அழகு!

அவரது இப்போதைய வெளியீடான தண்டாயுதபாணி பிலிம்ஸ் 'அக்கா தங்கை'யின் கடைசிக்காட்சி படப்பிடிப்பு பெப்ரவரி 19ந் திகதிதான் முடிவடைந்தது. 21ந் திகதி தணிக்கை சபைக்குப் போட்டுக்காட்டினர். 28ந் திகதி படம் தமிழகமெங்கும் திரையிடப் பட்டுவிட்டது.

## ஒரு தொழிலா ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டிக்கொண்டிருப்பது போல் தன் கிழிந்த சட்டையையும் அவள் போர்த்து மூடிக்கொண்டிருந்தது வீட்டினுள் எரியும் மங்கல் விளக்கால்அவனுக்குப் புலனாகியது.

எவ்வளவோ நம்பிக்கைகளுடன் அவள் கரம்பற்றி அணைத்து வந்த அவனால் அவளை ஒழுங்காகக் காப்பாற்றமுடியவில்லையா? பதிலற்ற கேள்வி அவனது நெஞ்சைக்கசக்குகிறது.

கலக்கத்தை அவள் கண்டு கொண்டால்...? எத்தனை மனோ தைரியத்துடன் இருக்கும் அவள்கூடத் தளர்ந்து விடுவாளே என்ற பயத்தினால் அவளிலிருந்து தன் பார்வையை மாற்றிக் கொண்டு கண்ணை மெல்லத் துடைத்துக் கொள்கின்றான். மேசைமீது வைக்கப்பட்டிருந்த கைக்கடிகாரம் 'டிக் டிக்' என்று இரவின் அமைதியை வெளிப்படுத்துகிறது.

எப்போதோ அவனது பிறந்த நாளுக்கு வற்புறுத்தி வாங்கிக்கட்டப்பட்ட அக்

# சொர்ணர் ஐயா!

[கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் 80-வது பூர்த்திவிழா இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. அகில இலங்கை இளம் நடிகர் சங்கத்தினர் இவ் விழாவை எடுக்கின்றனர்.]

கலையரசு சொர்ணலிங்கத்தாருடன் சேர்ந்து மேடை நாடகங்களில் நடிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது.

1950-ம் ஆண்டில் கொம்பனித்தெருசிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மண்டப கட்டட நிதிக்காக கொழும்பு செண்ட் பீற்றர்ஸ் மண்டபத்தில் 'ஸ்ரீமுருகன்' நாடகம் மேடையேற்றினோம். பழைய 'வள்ளி திருமணம்' தான். அதில் சொர்ணர் ஐயாவுக்கு வள்ளியின் சகோதரனான சின்னக்குட்டி அண்ணா வேஷம். எனக்கு நாரதர் வேஷம். வள்ளி தினைப்புலத்துக்கு காவல். சின்னக்குட்டி அண்ணா வள்ளிக்குக் காவல்.

திரை விலகியதும் வள்ளி ஆயலோட்டிக்கொண்டு பாடுவாள். அதற்குப்பின் நாரதரும் ஒரு பாட்டு பாடிக்கொண்டு பிரவேசிப்பார். அப்பொழுது சின்னக்குட்டி அண்ணா நாரதரைத் தடுத்து நிறுத்தி 'எங்கே போகிறாய் நீ ஆணா பெண்ணா' என்று விசாரிப்பார். திரை விலகிய நேரம் தொடக்கம் இரண்டு பாட்டுகளும் முடிந்து நாரதரைத் தடுத்து நிறுத்தும்வரை சொர்ணர் ஐயா எப்படிக் காவல் புரிவார் தெரியுமா?

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் 80-வது வயது பூர்த்தி விழாவின் இரண்டாம் நாளான 18-ம் திகதி கலையரசருக்கு 80செந்தாமரை மலர்களால் செய்யப்பட்ட மலர் மாலையொன்று அகில இலங்கை இளம் நடிகர் சங்கத்தால் அணிவிக்கப்படும். திருமதி சொர்ணலிங்கத்துக்கு 80மல்லிகை மொட்டுக்களால் செய்யப்பட்ட 'மலர்ச்செண்டும்' வழங்கப்படும்.

கொடுக்கை வரிந்து கட்டிக்கொண்டு இரண்டு கைகளிலும் ஒருபெரிய பொல்லை தூக்கியபடி இரண்டு கால்களையும் மடித்து அரை முழங்காலில் நின்றுகொண்டேயிருப்பார்! அறுபது வயதான மனிதராச்சே என்று நாங்கள் பரிதாபப்பட்டு 'ஐயா, சும்மா எழும்பி நில்லுங்கள்' என்று கேட்டால் 'சாச்சாய், இப்படித்தான் நிற்கவேண்டும்' என்று மறுத்துவிடுவார். நாடகத்தில் மட்டுமன்று இந்த 'போஸ்' கொடுப்பது. ஒவ்வொரு ஒத்திகை நடக்கும்போதும் அதே அரை முழங்காலில் பத்து பதினைந்து நிமிடங்கள் நிற்பார். சின்னக்குட்டி அவ்வளவு ஜரூராக காவல் செய்கிறானாம்!

இராமாயணத்தில் கூனி வேஷம் போட்டாலும் இந்த கதைதான். உடம்பை படாதுப்பட வளைத்து மணிக்கணக்காக நின்று கொண்டு கைகேயியுடன் கதைப்பார். ஒவ்வொரு ஒத்திகையிலும் இப்படித்தான்.

நாடகம் என்றால் சொர்ணர் ஐயாவுக்கு உயிர். ஓர் அடக்க முடியாத தாகம். ஒரு பைத்தியம். நாடகம் போடவேண்டுமென்ற 'ஐடியா' உதித்த நாள் முதல் அது அரங்கேறி முடிந்து பல நாட்கள் சென்றும் இரவு பகல் அதே சிந்தனையும் அதே கதையும்தான். எப்படி ஒப்பனை செய்ய வேண்டும், எப்படி மேடையில் பிரவேசிக்கவேண்டும். நடக்கவேண்டும், பேசவேண்டும் என்றெல்லாம் வருபவர் போபவர் எல்லோரையும் பிடித்து இழுத்து வைத்து ஆலோசனை கேட்பார். கொடுப்பார். ஒவ்வொரு சிறிய அசைவு, பார்வை, மூச்சு எல்லாவற்றையும் நுணுக்கமாகக் கவனித்து செய்யவேண்டும் என்பது அவருடைய அவா. 'செய்வன திருந்தச் செய்' என்பது அவருடைய தாரக மந்திரம்.

அவர் ஈழத்தின் தலைசிறந்த குணசித்திர நடிகனாக விளங்கியதற்கு இதுதான் சூட்சுமம்.

— 'வி. என். பி.'



தண்ணீர்த் தடாகத்தில் கலைத்தாமரை மலர்ந்து சிரிக்கிறது எதைக் கண்டு சொக்கி நிற்கிறார் சொர்ணர்?

மேகலா தயாரித்து தரும் கலை அரங்கம்

## மேடையில் ஏறிய பின்னர் எப்படி நடிப்பதென்று யோசிக்கிறீர்களே!

# சபாஷ், குமார் தனபால்!

'வாய் விட்டுச் சிரிக்காதவனை நம்பவேண்டாம் என்று ஒரு அறிஞர் சொல்லியிருக்கிறார். சென்ற போயா தினத்தன்று இரவு யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கின் முன் இருந்தவர்க ளெல்லாம் நம்பிக்கைக்கு வெடிகளை வீசி சிரிப்பால் சிதறவைத்தார்அவர். பின் இருந்தவர் முன் வந்தார். முன்இருந்தவர் நெரிபட்டார்.

நகைச்சுவை இலகுவில் பிறப்பதில்லை. ஆனால் அது கைவந்து விட்டால் பிறரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் அந்தணன் இந்தச் சங்கத்தில் அரங்கேற்றி தகுதியுடையதானால் பொற்கிழியைப் பெற்றுவிட விரும்புகிறான். யாரங்கே! (காவலன் வருதல்) தருமியை அழைத்து வாருங்கள்.

தருமி:- மன்னர் மன்னரே! சங்கத்துச் சான்றோர்களே! உங்களனைவர்க்கும் எனது பணிவான வணக்கம்.

நெ. செ.:- தருமி, நீ இயற்றிய பாட்டை தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்ற வேண்டும். சங்கப் புலவர்கள் சிறந்த பாட்டென ஏற்றுக்கொண்டால் பொற்கிழி உனக்கே அளிக்கப்படும், பாட்டை அரங்கேற்றுக; யாம் கேட்டு இன்புறுவோம்.

தருமி:- பாட்டு.

கொங்குதேர் வாழ்க்கை
அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது
கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய
நட்பின் மயிலியல்
செறி யெயிற்று
அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ
நீ அறியும் பூவே!

நெடுஞ்செழி:- ஆகா! அகத்துறை இலக்கணத்திற்கியைய விழுமிய உணர்ச்சியும், உயர்ந்த கற்பனையும், நுட்பமான ஒலிநயமும் மிளிகத்தில் பாட்டை அரங்கேற்றினால் பொற்கிழி பரிசாகக் கிடைக்கும் எனவும் கூறினார்.

நெடுஞ்செழியன்:- இறையனாரா? அவரை இங்கே அழைத்துவர முடியுமா?

தருமி:- அவகாசம் தாருங்கள் அழைத்து வருகிறேன்.

நக்கீரர்:- அரசர்க்கரசே! யான் கேட்ட வினாவுக்கு விடையளித்தபின்னரே இப்பொற்கிழியை வழங்க வேண்டும். தொடக்கத்திலேயே பாட்டை இயற்றியது தானல்ல என்பதைக் கூறாதது தருமியின் குற்றம் தான். எனினும் பாட்டு உயர்ந்த, சிறந்த பாட்டாக விளங்குவதால் அக்குற்றத்தைச் சங்கம் பொறுத்தருளும். இறையனார் இங்கே வந்து விடை பகர்ந்ததும் பொற்கிழியை அளிக்கலாம்.

நெடுஞ்செழியன்:- தருமி! புலவர் பெருந்தகை கூறியது யாவையும் கேட்டாயா? நாளைக்காலை இவ்விடம் மீண்டும் தமிழ்ச் சங்கம் கூடும். பாட்டை இயற்றிய இறையனாரை அழைத்துவர வேண்டியது உனது பொறுப்பு.

தருமி:- தங்கள் ஆணைப்படியே அழைத்து வருகின்றேன் அரசே.

(தொடரும்)

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வோமே என்ற முடிவுடன் அவனோடு புறப்படுகிறேன்.

மேற்கூரையைத் தவிர நாற்புறமும் திறந்துவிடப்பட்ட ஓலைக் கொட்டில். பக்கவாட்டில் கிடக்கும் மரக்குத்தியொன்றின்மீது இருவரும் அமர்கிறோம். இரண்டு பிளாக்களில் சரக்கு ஊற்றப்பெற்று எங்கள்முன் வை.கப்படுகின்றது. நண்பன் ஒரு மிடறு உறிஞ்சி சுவைத்துவிட்டு ''சோக்கான சரக்கடா'' என்று கண்களைச் சிமிட்டியபடி நாக்கைச் சப்புக்கொட்டிக் கொள்கிறான். எங்களுக்கு முன்னால் பனைமரக் குத்தியொன்றின்மீது அமர்ந்துள்ள இருவரும் புன்முறுவல் பூக்கிறார்கள். அந்த வேளையில் 'அப்பனே முருகா' என்ற ஆதங்கம் நிறைந்த குரல் கேட்கின்றது. ஆம், அதே குரல்தான். கதிர்காமக் கந்தன் சந்நிதியில் பக்தி பரவசமாய் ஒலித்த அதே குரல்தான், அந்தக் கள்ளுக்கொட்டிலுக்குள் ஒலிக்கிறது. நான் துணுக்குற்று குரல் வந்த திசையைப் பார்க்கிறேன்.

அதே மனிதர்! கண்களில் அதே ஒளி! முகத்திலும் அதே களை! நெற்றியிலும் விபூதிப் பட்டை. ஆனால்...!

பட்டாளத்துக்குப் போகும் கடமைவீரனைப் போல் கம்பீரத்துடன் எதையும் லட்சியம் செய்யாதவராக அவர் எங்களைக் கடந்து போகிறார்.

''என்ன சாமியார் வெளிக்கிட்டாச்சே!''

முன்னாலிருந்தவர்களில் ஒருவர் கேட்கிறார்.

'ஓம் தம்பி.'

எனக்கு முன்போலவே உடம்பு புல்லரிக்கிறது. 'பாவம் பைத்தியம்!'

முன்னாலிருந்தவர் பரிதாபப் பட்டுக்கொள்கிறார்.

''பைத்தியமோ? அப்படியொன்றுமில்லை,'' என்கிறார் மற்றவர்

'குடியடா பெயா, பார்த்துக் கொண்டிருக்கிறாய்'' நண்பன் என்னை வற்புறுத்துகிறான். நான் பிளாவைக் கூர்ந்து பார்க்கின்றேன்.

புகை கவிந்த வானமண்டலத்தில் மங்கலாகத் தெரியும் சந்திரமண்டலத்தை நோக்கி மனிதன் மின்வேகத்தில் பறந்து கொண்டிருப்பது அதில் தெரிகிறது.

(யாவும் கற்பனை)

கொண்டு கண்ணை மெல்லத் துடைத்துக் கொள்கின்றான். மேசைமீது வைக்கப்பட்டிருந்த கைக்கடிகாரம் 'டிக் டிக்' என்று இரவின் அமைதியை வெளிப்படுத்துகிறது.

எப்போதோ அவனது பிறந்த நாளுக்கு வற்புறுத்தி வாங்கிக்கட்டப்பட்ட அக் கைக்கடிகாரம் இல்லாமல் கூட அவனால் ஒழுங்காக காலையில் காரியாலயத்துக்குப் போகமுடியும். அதை விற்றுவிட்டால்...?

எனக்காக அதைமட்டும் விற்றுவிடாதீர்கள்' உறங்கிக் கொண்டிருக்கும்பொழுது கூட அவளதுவாய் இதைத்தான் முணுமுணுக்கவேண்டுமா?

ஓவியத்தை நல்லாக வரையவேண்டும் என்பதற்காக சிலவேளைகளில் சித்திரக்காரன் தானே தேய்ந்துவிடுகின்றான்.

அவனுக்காக அவள் தனது அடிப்படை உரிமைகளை கூட விட்டுவிட்டாளா? அவனுக்கு தெளிவுபடுத்தமுடியாத ஒரு தடுமாற்றம்.

ஜன்னலூடாக மெல்லிய குளிர்காற்று வீசுகிறது. அவன் எழுந்து ஜன்னலைச் சாற்றச்செல்கின்றான். அவளின் கிழிந்த சேலையும் குழந்தைகளின் சின்னச்சட்டைகளும் பனியில் ஈரம் உலர்ந்து கொண்டிருக்கின்றன.

அவளது உடலும் அவனைப்போல் உழைப்பால் பிழியப்பட்டு சுருக்குகள் விழுந்துவிட்டது. அவன் மங்கிய கண்களுக்கு அது மட்டும் தெளிவாகத்தெரிகிறது.

வீட்டுச் சிறையிலிருந்து விடுதலையாகிவிட்டோம் என்ற நம்பிக்கையில் வேலைகள் கூடிய மற்றச்சிறையில் அகப்பட்டுக்கொண்டுவிட்டாளா? இதை அவள் மறைக்கின்றாளா அல்லது எதிர்பார்த்தது தானா?

ஏதோ ஒருநம்பிக்கையுடன் அவள்தொடர்ந்து உறங்குகிறாள்.

இரவு தனது தொழிலை முடித்துக்கொண்டு செல்கிறது என்பது இளவெய்யிலின் வரவால் தெரிகிறது.

நாள்விடியப்போகின்றது. அவன் தொழிற்சாலையிலும் அவள் வீட்டிலுமாக அந்த நாளை முடிந்த அளவுவெகு வேகமாகத்தள்ளிவிட்டு களைத்துவிடுவார்கள்.

மாலையில் வீடுதிரும்பும் அவனை அவனது மனைவியுடன் அந்தக் கேள்வியும் ஆவலுடன் காத்துநிற்கும்.

அவளை அவள் தாய்வீட்டுக்கு ஓய்வுக்காக எப்பொழுது கூட்டிச்செல்லப்போகின்றான்...

பாவம் [illegible] ஒரு தொழிலாளியின் [illegible]னைவி!

# எப்படி நடிப்பதென்று யோசிக்கிறார்களே!

மேடையில் ஏறிய பின்னரே சிலர் எதைப்பேசுவது, எப்படி நடிப்பது என்று யோசிக்கிறார்கள் என்பது யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் நடைபெற்ற சில நாடகங்களைப் பார்த்த போதுதான் தெரிந்தது.

'றிகேசல்' (ஒத்திகை) என்ற ஒன்று நாடகமேடை ஏறுவதற்கு முன் இருப்பது இப்போது பழசாகிப்போய் விட்டதோ என்னவோ?

நடிக்கவேண்டுமென்ற ஆவல் இருப்பது நல்லது தான். ஆனால் அதற்காக மேடையில் ஏறியபின்னர் பார்த்துக்கொள்வோம் எ..று அதிக நம்பிக்கை வைத்துவிடுவதால் நாடகத்தைப் பார்ப்பவர்கள் மீண்டும் அந்தநடிகரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை இழந்துவிடவே செய்வர். எதை குளறப்போகிறாரோ என்ற ஒருவித பயமும் ரசிகர்களைப் படபடக்கவைத்து விடும்.

முன்னர் ஒரு கதாப்பிரசங்கமென்றால் அல்லது நாடகமென்றால் பெண்களை கிண்டல்செய்யாவிட்டால்- அவர்களைப்பற்றி ஏதாவது புண்படுத்திப் பேசாவிட்டால் அவை கீர்த்திபெற்றதாகக் கருதப்படுவதில்லை. இப்போது நிலை எவ்வளவோ மாறிவிட்டது என்பதை இன்னமும் பலர் புரிந்துகொள்ளாது தரமான நாடகங்கள் நடத்த முற்படுவது சற்றுக்கஷ்டமானகாரியமே.

சட்டமும் சமூகமும் இடம் கொடுக்குமளவுக்கு பெண்கள் தமக்கு விரும்பும் விதத்தில் அலங்காரம் செய்துகொள்ளலாம். இதனை நாடகமேடையில் ஏறிநிற்பவர் கையாண்டு செய்வதால் நாடகத்தின் தரம் குறையுமேதவிர சமூகத்தை சீர்திருத்துவதாக அதுமையாது.

தனிப்பட்டு பேசிக் கொள்வது வேறு, பலர் மத்தியில் நாடக மேடையில் நின்று பேசுவது வேறு என்பதை நாடகத்தில் எந்தப் பாத்திரத்தை ஏற்கும் ஒருவரும் மிக அவதானமாக நெஞ்சில் இருத்திக் கொள்ளவேண்டும்.

'குமரிகள், பெட்டைகள்' இந்த வார்த்தை மேடையிலிருந்து நடிகர் வாயிலிருந்து ஒலிபெருக்கிகள் மூலமாக அலறும்பொழுது ஒழுங்காக மானத்தை மூடி நிற்பவர்கள், காதுகள்மூடத் தான் செய்யும். கொச்சை வார்த்தைகளில் பேசினால் தான்கிராமத்தவர்களுக்கும் புரியும் என்று கூறுவது கிராமத்தவர்களை 'பேசத் தெரியாதவர்கள்' என்று பெயரிட்டு அழைப்பதாக இருக்குமேதவிர சரியான வாதமாக இராது.

கனியிருக்கக் காயைக்கவர முயற்சிப்பது கலைத்தொண்டாக இருக்கமுடியாது.

மதுபோதையில் குளறுபவருக்கும் நாடகமேடையில் ஏறிநின்றுபேசுபவருக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கவேண்டும்

புண்படுத்தாதுபிறர்மனம் நோகாதுநல்ல நகைச்சுவை-தரமான நகைச்சுவை எல்லோரும் வாய்விட்டு மனம்விட்டு பாகுபாடற்று சிரிக்கும் பண்பான நகைச்சுவை-வசனங்கள் தேடி எடுத்து அதைச் செம்மையாக உச்சரிக்கப்பழகியபின்னரே நாடகமேடையில்ஏற வேண்டும் என்ற நியதி விதி அனுசரிக்கப்பட்டால்தான் தமிழில் தரமான நகைச்சுவை நாடகங்கள் மேடையேற வாய்ப்பிருக்கும்; ரசிகர்களது வரவேற்புமிருக்கும்.

நாடகமேடை கோணங்கிகளின் விளையாட்டு மேடையாக இருக்கக் கூடாது. அது சமுதாயத்தின் சீர்திருத்த மேடையாக இருக்கவேண்டும். அப்போதுதான் சமுதாயத்தில் நாடகம் முக்கிய அங்கம் வகிக்க முடியும்; சமுதாயம் பயன் பெறமுடியும்.

— ஒலிபெருக்கி.

## சத்தம் எழுப்புகிறார் ரவி!

கொஞ்ச நாட்களாக சத்தமே இல்லாமலிருந்த ரவிச்சந்திரன் இப்போது 'சத்தம்' எழுப்புகிறார்.

இவர்சரோஜாதேவியுடன் நடித்த ''ஓடும் நதி'' இந்த மாதத்தில் வெளியாகிறது. ஒரு புதுப்படத்திலும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். அதில் வெண்ணிற ஆடை பி. நிர்மலா அவருக்கு ஜோடி.

0 0 0

## வாத்தியாரம்மா

''டீச்சரம்மா'' என்ற பெயரில் ஒருபடம் சமீபத்தில் வெளியாயிற்று. இப்பொழுது ''வாத்தியாரம்மா'' என்ற பெயரிலும் ஒரு படம் தயாராகிறது. இதை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் தயாரிக்கிறார். எஸ். எஸ். ராஜேந்திரன் இந்தப்படத்தில் ஒரு சான்ஸ் பெறுகிறார்.

'வாய் விட்டுச் சிரிக்காதவனை நம்பவேண்டாம்' என்று ஒரு அறிஞர் சொல்லியிருக்கிறார். சென்ற போயா தினத்தன்று இரவு யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கின் முன் இருந்தவர்களெல்லாம் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்தான். எல்லோரும் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டு தானிருந்தார்கள். திறந்த வெளி அரங்கில் அடிக்கடி வந்து கொண்டிருந்த ஒரு 'பாத்திரம்' தான் இப்படி பார்த்துக் கொண்டிருந்தவர்களை நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கிக் கொண்டிருந்தது.

வார்த்தைக்கு வார்த்தை நகைச்சுவை, சொல்லுக்கு சொல் சிரிப்பொலி எதிரொலித்தது, ஜிஞ்சாமிர்தம் குமார் தனபால் தமது நகைச்சுவையால் ரசிகர்களை வெகு இலகுவாகத் தன்பால் இழுத்து இழுத்து அவர்கள் எங்கிருக்கிறோம் என்ன நேரமாகிறது என்பதனை மறக்கச் செய்து கொண்டிருந்தார். பக்கத்தில் யார் இருக்கிறார் காலமெல்லாம் இப்படி வாய்விட்டுச் சிரிக்கலாமோ என்று சிந்திக்க நேரமில்லாமல் ஒவ்வொருவரையும் கொட்டும் குளிரில் சிரிப்பால் குளிரவைத்துக் கொண்டிருந்தார் தனபால்.

'தம்பி கொழும்பில' என்ன செய்கிறார் என்பதை அறிவதற்காக இரவு சுமார் 9 மணி வரை காத்திருந்து விட்ட மக்கள் எழும்பிச் செல்ல முயன்ற போது குமார் தனபாலின் குரல் கேட்டது. எழுந்த ரசிகர் கூட்டம் எழுந்த இடத்திலேயே அமர்ந்தது. அமர்ந்த ரசிகர்களை அடிக்கடி நகைச்சுவை வெடிகளை வீசி சிரிப்பால் சிதறவைத்தார் அவர். பின் இருந்தவர் முன் வந்தார். முன்இருந்தவர் நெரிபட்டார்.

நகைச்சுவை இலகுவில் பிறப்பதில்லை. ஆனால் அது கைவந்து விட்டால் பிறரை வெகு இலகுவில் கவர்ந்து விடலாம் என்பதற்கு தனபால் நல்ல எடுத்துக்காட்டு.

வேலைப்பழுவிலிருந்து விலகி ஓய்வெடுக்க விரும்பியவர்களுக்கு தனபால் அளித்த நகைச்சுவை விருந்து சிந்தனைக்கும் உணவளித்தது. போலித்தனத்தில் ஊறி விடுவதால் நம் அருமையான பொழுது எப்படிப் பொசுங்குகிறதென்பதை அவர் வேடிக்கையாகக் காட்டியது மூளைக்கு நல்ல வேலையைக் கொடுத்தது.

ஒரே வார்த்தையில் இருஏன் பல கருத்துக்களையும் தனபால் அனாயாசமாக அள்ளி வீசிய பின்னர் நினைத்து நினைத்துச் சிரிக்க வைத்தது.

நம்மிடம் இது இல்லை அது இல்லை என்ற குறைகள் பல இப்போது மறைந்து கொண்டிருக்கின்றன. நல்ல நகைச்சுவை நடிகர் இங்கே எங்கே இருக்கிறார் என்ற மனக்குறைக் கேள்விக்கு நிறைவான பதில் தருகிறார் குமார்.

போட்டிக்கு அப்பால் தனித் தன்மையோடு சிரிக்க வைக்கும் ஆற்றலுள்ள நகைச்சுவைக் குமாரர் இன்னும் சிறிது கவனம் செலுத்தினால் ஈழத்து நாடகக்கலை பெருமை கொள்ளத் தக்க ஒரு நகைச்சுவை நடிகரை விரைவில் பெற்று விடும் என்பது உறுதி.

—கணேஷ்

# படவுலகில் பல்சுவை

★ எம். ஆர். ஆர். வாசு, எம். ஆர். ராதாவின் மகன். அவர் தந்தையைப் போலவேபேசி நடித்துள்ள ஒரு படம் வெளியாகியிருக்கிறது. பெயர் ''பணக்காரப் பிள்ளை''.

★ 'அன்பு வழி'யில் ஜெய்சங்கருக்குப் புது விதமான பாகம். அவர் அதில் இளம் வயலின் வித்துவான்!

★ பாரதி நடித்து வெளியான 'நான் யார் தெரியுமா'வின் சில காட்சிகளை நடிகர் ரஞ்சன் டைரக்ட் செய்தார். அப்புறம் அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்.

★ நடிகை பாரதியின் குலதெய்வம் வெங்கடேஸ்வரர். ஆனால் வணங்குவது விநாயகரை!

★ இயக்குநர் ஏ. பி. நாகராஜனது துணைவி முன்னைய நாடக நடிகை ராணி. இவருக்கு மூன்று பிள்ளைகள்.

★ 'பர்ஸ்' என்ற இந்திப் படத்தில் ஒரு கட்டத்தில் நடித்திருக்கும் நாகேஷ் தானே சுயமாக இந்தி பேசி நடித்திருக்கிறார்.

★ முன்னைய பிரபல நடிகை எஸ். பி. எல். தனலட்சுமியின் மகள் ஜோதிலட்சுமி. இவருடைய பெரியம்மாவின் மகன் டைரக்டர் டி. ஆர். ராமண்ணா. இவர் அக்கா தான் முன்னைய பிரபல நடிகை டி. ஆர். ராஜகுமாரி,

## காப்டன் 'ரஞ்சன்'

பழைய பிரபல நடிகர் ரஞ்சன் நடித்த படமொன்று இப்பொழுது சென்னையில் திரையிடப்பட்டுள்ளது. ''கேப்டன் ரஞ்சன்'' என்ற பெயரில் வெளியாகியுள்ள அப்படத்தில் ஸ்ரீ ரஞ்சிவி அவருடைய ஜோடி. ஜோதி என்ற ஒரு புதுமுக நடிகை கவர்ச்சி காட்டுகிறார். பிரபல நடிகை ஜெயலலிதாவின் சின்னம்மா (அம்மாவுடைய உடன்பிறந்த சகோதரி) வித்தியாவதியும் இதிலிருக்கிறார். இப்படம் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக தயாரிப்பிலிருந்ததாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

யாரை வழிபடவே சிவபிரானுக்கு விருப்பம் என்பது சமணசமயிகளைத் திருவருட் பெறுவாளால் வெட்டி மன்னனும் மன்னியநாட்டுள் வதிமக்களும்திருநெறியாகிய சைவத்திறனுணர இப் பகுதிசாதனமாகும்.

**நாலாந்திருமுறை**

மருணீக்கியார் என்னும் பேருக்கு இசைந்த அப்பர் பெருமான் அன்பும் அரும் பெருந்தொண்டும் மிகமிகப் போற்றற்பாலன. திலகவதியாரின் சகோதரவாஞ்சையும் தருமசேனராக மாறிய மருணீர் செய்கையும் சிந்தித்தால் சிவ சீவ வேறுபாடுகளும், சைவத்திருநெறிசார எம் பரம்பொருள் கொண்ட அருளின் சிறபும் இனிது உணரலாம். பரசமயிகளின் துன்பங்களுகு அஞ்சாவீரர் அப்பரடிகள். ''அஞ்சுவதுயாதொன்றுமில்லை அஞ்சவருவதும்இல்லை'' என்ற மனவுறுதிப்பாடு அப்பரிடம் கண்டோம். சைவசமயிகளாகிய நாங்களும் எதற்கும் அஞ்சாநெஞ்சராக வாழ்வோம்.

சொற்றுணை வேதியன்
சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி
பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது
நமச்சிவாயவே.

ஐந்தாந்திருமுறை சிறிய இனியகுறுந்தொகைகள் அமைந்தது. நன்னெறி வழுவிஞர் இம்மைமறுமைகளில் துன்பமடைதலை நன்குணரலாம்.

பனைக்கை மும்மத
வேழமுரிவன்
நினைப்பவர் மனம்
கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாமம்பலக்
கூத்தனைத்
தினைத்துணைப்போதும்
மறந்துய்வனே.

அப்பரடிகள் திருஞானசம்பந்தருடன் வேதாரணியத்துத்திருக்கதவந்திறக்கப் பாடியவர். அப்பூதியடிகளுடைய புதல்வனுக்கு விடந்தீர்த்து உயிரளித்த திருவாளர். சைவசமயிகள் என்ற பேர் மட்டும் போதாது. ஆ, அநியாயமாகமனிதர் காலம் கழிக்கின்றூர்களே! என்று அப்பரடிகள் கூறும் பதிகங்கள் பல. பிறவியில் மனிதன் ஒரு மேலான அமைப்புடையவன்என்னும் அப்பர் பெருமானை மறக்கவும் படுமா?

''மனித்தப்பிறவியும்
வேண்டுவதே
இந்த மாநிலத்தே''

பாருங்கள்! ஆகாயச் சந்தி

''மண்முதலாமுலகேத்த
மன்னுதிருத்தாண்ட
கத்தைப்
புண்ணியாவுன்னடிக்கே
போதுகின்றேன்
எனப்புகன்று
நண்ணரிசிவானந்தஞான
வடிவேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ்
ஆண்டவரசமர்ந்திருந் தார்.
(பெரிய புராணம்)

ஒவ்வொரு அன்பர்களும் எடுத்துக்கொண்ட திருமுறைகளை துருவித் துருவிச் செம்பொருள் வளம் விளக்கிஞர்கள். ஏழாந்திருமுறை சுந்தரமூர்த்தி நாயனரின் தத்துவச் செறிவில் விளக்கும். ஆலாலசுந்தரர் அவதாரமோ மிக்க அற்புதமுடை சுந்தரா? வந்தனையோ என்று பரம்பொருள் திருவாய் மலர்ந்து கேட்கும் பெருமை அளவுபடாதது. ''பித்தா பிறை சூடிப் பெருமானே யருளாளா'' என்பதும் 'திருவாரூரில் வாழ்ந்தும் போதீரே' என்பதும் திட பக்தியின் இறுதிப்பாடுகாட்டும் 'மீளா அடிமை' என்பது சீவனும் சிவனும் ஒன்று என்போரை மறுத்து ஆண்டான் அடிமைத்திறம் புகட்டும்.

மாணிக்கவாசக சுவாமிகளின் கனிந்த பாடல்கள் எட்டாந் திருமுறையாகும். திருப் பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருவேசறவு ஆதியனவும் தித்திக்கப் பாடியன. திருவருள் மணிவாசகப் பெருமான் அடைந்த சாயுச்சியப்பேருல் இனிது உணரலாம். திருக்கோவையார் பரந்த பல கருத்துக்களை அள்ளித்தரும் பண்புடையது. அதனுல் திருவாசகத்திற்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்று கூறினர்.

ஒன்பதாம் திருமுறை பல இசைப்பாசுரங்களை யுடையது. ஒரு பாசுரமே இறைவன் அருள்நிலை தெரிக்குப்.

கற்றவர் விழுங்குங்
கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா
மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி
விளக்க
செற்றவர் புரங்கள்
செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக்
கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண்
குளிர்ந்தனவே

பத்தாந்திருமுறை திருமந்திரம் என்பது. இத்திருமந்திரம் முழுதும் யோகசாதனைகளையும் இறைவனின் குன்றுத அருட்செறிவில் வேதாகம நுண்

# சனி பகவான் பெயர்ச்சி தேசிய ரீதியில் அதன் நன்மை தீமைகள் யாவை?

சனிபகவான் என்றதுமே பொதுவாகப்பலரும் பீதியடைவர். ஆனுல் அவர்நன்மைகள் செய்வதிலும் வல்லவர். சனிபகவானின் கடாட்சம் மட்டும் கிட்டிவிட்டால் அவா உலகையே ஆளவைத்துவிடுவார். கடந்த 7-ம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு மீனத்திலிருந்து மேடத்துக்குப் பிரவேசித்துள்ள இவரின் பெயர்ச்சி தேசிய அடிப்படையில் என்ன பலன்களைச்செய்யும் என்பதைச் சோதிடர் விளக்குகிறூர்.

மந்தகதிக் கோள் சனி பகவான் தமது 2 1/2 வருடகால மீன இராசிச்சஞ்சாரத்தை முடித்துக்கொண்டு கடந்த 7-3-1969 பிற்பகல் 9-30 மணிக்கு மேட இராசிக்குட் பிரவேசித்துள்ளார்.

மக்கள் மனதில் சனி என்றுல் போதும், ஒரே திடீர் கிலேசம் தோன்றிவிடுகின்றது. இது ஒரு அர்த்தமற்ற கிலேசம். சனி எல்லோருக்கும் தீங்கிழைப்பதில்லை. ஒருவர் ஜாதகத்தில் சனி ஒரு யோகக்கோளாகி பலம்பெற்று நின்றுல் அவர் செல்வந்தராய், உலகாழுந்திறன்பெற்று விளங்குவார். பல உலகத்தலைவர்கள் சனியின் பரிபாலனத்தால் உலகப் பிரசித்திபெற்ற தலைவராய் விளங்குகின்றனர்.

சனீஸ்வரனை ஒளிக்கோள் சூரியனின் மைந்தனென்றும் இதிகாசங்கள்கூறும். ஆனுல் பிதாசூரியபகவானிடமுள்ள பிரகாசம் பிள்ளை சனீஸ்வரனிடமில்லையே. மேலும், சனீஸ்வரனின் கிரணங்கள் சூரியனைச் சேருங்கால், சூரியன் பூரணதீக்கோளாகவே மாறிவிடுகின்றூர்.

சனியின் அம்சம், மெலிந்து நுண்ணிய உருவம், நீண்ட கேசம், கறுப்புநிறம், கவர்ச்சியற்ற உறுப்பமைவு, குழிவிழுந்த கண்கள் இவையாம்.

சுக்கிரபகவான் இவரின் உற்றநண்பன். சுக்கிரனின் ஆட்சி இராசியாம் துலாம் இராசியில்தான், சனிபகவான் உச்சபலம்பெறுகின்றூர். இடபம், துலாம் ஆகிய இராசிகளில் பிறந்தார்க்குச் சனி ஒரு யோகக்கோளாகி விடுகின்றூர். மிதுனம், கன்னி மகரம் கும்பம் ஆகிய இராசிக்காரர்க்கும் இவர் சுபம் செய்வார். மகரம், கும்பம் ஆகிய இராசிகட்கு அதிபர் சனிபகவான் மகரம், கும்பம் ஆகிய இராசி

## மேல்கரவை காவ. சிவப்பிரகாசன்

களில், மகர இராசிக்காரர்க்கு சனிபகவான் 1-ம், 2-ம் இராசிகட்கதிபராகி மிக உன்னத பலனைக் கொடுத்துவிடுகின்றூர்.

ஓர் இராசியில் சனிபகவான் சுமார் 2 1/2 வருடங்கள் சஞ்சாரம்செய்வார். இவரது பிரயாணம் மிகமந்தகெதியாகும். பன்னிரண்டு இராசிகளைக்கொண்ட ராசமண்டலத்தைச் சுற்றிவரச் சனிபகவானுக்கு 30 வருடங்கள் பிடிக்கும் ஒருவர் பிறப்பின் போது சனிபகவான் தான் நின்ற இராசியை அதிகமாக மூன்றுமுறை கடக்கமுடிகின்றது சனிமுதலாவதுசுற்றுலாவில் தான் நின்ற இராசியைக் கடக்கும்போது அதிதீவிர கஷ்ட பலனையே கொடுக்கின்றூர். இரண்டாவது சுற்றுலாவில் சனீஸ்வரனின் களிப்பு கேளிக்கைகட்கு ஒரு அளவேயில்லை. ஜாதகர்க்கு குபேர சம்பத்து, காதல் வாழ்க்கையில் ஈடுபாடு, ஆடம்பரம், அந்தஸ்து இவற்றைக் கொடுத்துவிடுகின்றூர். அடுத்து மூன்றுவது உலாவில் சந்திரன் நின்ற இராசியைக் கடக்கும்போது அந்நபருக்கு அதிகமாக மாரகத்தையே கொடுத்துவிடுகின்றூர். மனிதனின் அந்தஸ்தை வாழ்க்கையைப் பூராவும் நிர்ணயிக்கும் மிகச் சிறிய உருவினதாயுள்ள முடக்கோள் சனியின் சக்திதான் என்னே. ஆயுள்காரகன் என்ற நாமம் சனீஸ்வரனிற்கு எத்துணைப் பொருத்தமானதாகின்றது.

வாழ்க்கை விஷயங்களை ஆராய உதவும் மகாதெசா காலத்தில் 19 ஆண்டுகள் சனிமகாதெசைக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. எண்களின் தொடக்கம் 1 என்ற எண்ணுகும். முடிவு எண் 9 என்ற எண்ணுகும். எனவே 19 என்ற எண்ணில் எண்களின் தொடக்கஎண்ணையும் முடிவு எண்ணையும் நீங்கள் காண்கிறீர்கள். உருத்திரனை ஆதியுமந்தமுமானுய் போற்றி என்று தொழுவதின் அர்த்தத்தை இப்பொழுது விளங்க முடிகின்றது.

சந்திரன் நின்ற இராசிக்கு 12-1-2 ம் இராசிகளில் சனீஸ்வரன் சஞ்சாரம் செய்யும் காலமாகிய 7 1/2 வருடகாலங்களும் ஏழரைச் சனியன் காலம் என்று பெயர்படும். ஆயினும் 12-1 ம் இராசியின் சஞ்சாரத்தின்போதுதான் சனி கூடுதலான கஷ்ட பலன்களைக் கொடுக்கின்றூர்.

சனிபகவான் பிரவேசம் செய்த மேட இராசி ஒரு அக்கினி தத்துவ இராசியாகும். அத்தோடன்றித் தீக்கோள் செவ்வாயின் இராசியுமாகும். பிரவேசித்து நிலை கொண்ட நட்சத்திரமும், கேதுவை அதிபராய்க் கொண்ட அச்சுவினி நட்சத்திரமாகும். வியாழனின் கிரணங்கள் மேட இராசிக்குக் கிட்டவில்லை. எனவே சனீஸ்வரன் பரிபூரண தீக்கோளாகவே திகழ்கின்றூர். கோசர ரீதியாக ஒரு கோள், துர்த்தானங்களில் நீசம், பகை, மூடம் இவைகளோடிருப்பின் அதிக நஷ்ட பலனேயாம்- 'பலதீபிகை'.

தேசிய நோக்கில், இலங்கையின் ஆட்சி இராசி சிங்



கம். சிங்க இராசி வியாழனின் பரிபாலனத்துள் இல்லை. சனிபகவானின் மேட இராசிப் பிரவேசத்தினுல், இலங்கையின் இராசியமைவில் உள்ள 3-6-9-11 ம் இராசிகட்குரிய பகுதிகள் பாதிப்படையும். குறிப்பாக 9-11 ம் இராசி கூடுதலான பாதிப்புக்காணும். சனீஸ்வரனின் 3 ம் இராசி நோக்கு மிகத்தீது. எனவே 11 ம் இராசி அதிதீவிர பாதிப்புக்காணும். சனீசுவரனுக்கு வயது வந்தோர் நிலச்சுவாந்தார், பாமரர், சுரங்கம், பூமிப் பிரயோசனம் இவற்றில் கூடுதல் ஆதிக்கம் உண்டு.

(6-ம் பக்கம் பார்க்க)

## கவியின் ..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

**தருவனத்துள் யான் இயற்றும்**
**தவவேள்விக்(கு)**
**இடையூறுய்த்**
**தவம் செய்வோர்கள்**
**வெருவரச் சென்று அடை காம**
**வெகுளி என நிருதர் இடை**
**விலக்காவண்ணம்**

என்பது கம்பன் வாக்கு. அந்த அரக்கர்கள் எப்படி வருவார்களென்றுல் தவம் செய்வோர்களை வெருவரச் செய்யும் காம, வெகுளி என வருவார்களாம். ஆம், துறந்தோருளத்தைப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்கும் கண்ணுர் என்றுரலவா அருணகிரியார். என்ன உவமை! காமம், கோபம் கருத்திலே புகுந்து கலகம் செய்யும் அரக்கர்கள். உட் கலகம் செய்யும் இந்த நித்திய சத்துருக்களை உட்பகை என்று கூறலாம். ஆனுல் உட்பகை அரக்கரென்ற பொருத்தம் மட்டுமா? பேசுகிறவர் யார்? விஸ்வாமித்திரர். இவருடைய பெரும் தவங்கள் எல்லாம் காமம், வெகுளியால் அழிந்தது என்பது பிரசித்தம்! இந்த உவமையில் விஸ்வாமித்திருடைய சுயசரிதையும் பிரதிபலிக்கின்றது. ஆகவே அத்தகைய அரக்கர், வேள்வியைக் கெடுத்து விடாதபடி காப்பாய்! என்று கூறியதும் ''போர் முனையிலே காப்பாய்'' என்று கூறியதும்-செருமுகத்தில் காத்தி என- அந்த வார்த்தை சந்தோஷத்தை வற்றச் செய்யவில்லை. போர்முனையிலே இந்திரலோகத்தைக் காப்பாற்றியவன் யாகத்தைக் காப்பாற்றவும் தயார்- ஆனுல்,

''நின்'' என்று உன்னுடைய என்கின்றுன். மன்னனும், ஓஹோ என் படைகளை அனுப்பினுல் போதும் என்று சொல்லப்போகின்றுனே'' என எண்ணும் போது ''நின் சிறுவர்'' என்றதும் -சிறுவர்களா! படைவீரர்கள் வேண்டாமா என எண்ணும் சமயம், ''நின் சிறுவர் நால்வரினும்'' என்று தொடர்த்துகொண்டேபோகின்றுன். இப்போதான் தசரதனில் உவகைக் கடல் வரண்டது. நால்வரில் எவனைக் கேட்கப்போகிறுரோ என்று தசரதன் உள்ளம் ஏங்கி வரண்டு விட்டது. அவன் கண்களுக்கு முனிவன் முனிவனுகத்தோன்றவில்லை. கேட்கும் போது 'நால்வரினும் பெரிய' என்று கேட்காமல் 'கரிய'

# திருமண அழைப்பு

**சதாசிவம் - சிவக்கொழுந்து**

நயினுதீவு திரு. சி. இராமநாதன், காலஞ்சென்ற திருமதி இராமநாதன் ஆகியோரின் கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் சதாசிவத்துக்கும் (நீர்ப்பாசன பொறியியலாளர், நீர்ப்பாசன இலாகா, கொழும்பு) நல்லூர் திரு. க. வெற்றிவேலு தம்பதிகளின் ஏக புதல்வி திருநிறை செல்வி சிவக்கொழுந்துவுக்கும் 14-3-1969 மு. ப. 9-57— 10-45 மணியளவில் வரும் சுபமுகூர்த்த சுபவேளையில் யாழ்ப்பாணம் நல்லூர், 15/1, செட்டித்தெருவிலுள்ள மணமகள் இல்லத்தில் சைவசமய ஆசாரப்படி நயினுதீவு ஸ்ரீலஸ்ரீ சா. பரமேஸ்வரக் குருக்கள் அவர்களால் திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்துள்ளனர். உறவினர்களையும் நண்பர்களையும் இவ்வைபவத்துக்கு சமுகமளிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றேம்.

796

# வரிவிளம்பரம்

## தேவை

**மணமகள்:**

இந்து வேளாளமணமகன், தொழில்: உதவி எண் பார்வையாளர். படித்த, நல்ல குணம், அழகுள்ள மணமகள் தேவை. வயது 20-26 வரையுள். சீதனம் எதிர்பார்க்கப்படும். விரும்புவோர் குறிப்பு, விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 748, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

748

மணமகள்

தனியாக வாழும் சுகதேகியான 55 வயதுடைய பென்ஷனருக்கு வாழ்க்கைத் துணையாக 40 வயதுக்கு மேற்பட்ட தெய்வபக்தியும் அடக்கமும் தேகாரோக்கியமும் உடைய சைவ வேளாளப்பெண் தேவை. தமிழறிவு இருந்தால் விரும்பத்தக்கது. விளம்பர இலக்கம்: 750, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

750

கடைச்சல் தொழிலில்

# பெண் ஆணுடன் சரிநிகர் சமானமாக வாழ வேண்டுமா?

## ஆணுக்குப் பெண் அடிமையல்ல

—செல்வி ஜீவா கனகசுந்தரம்.

பெண்கள் ஆண்களுடன்

கூடாது. 'அடக்கத்துடன் வாழ்; ஆனுல் அடிமையாக வாழாதே' என்றநன்மொழிக்கிணங்க, பெண்கள் தமக்கே உரித்தான நற்குணங்களுடன் அடக்கமாக வாழவேண்டுமேயொழிய

## கூந்தல் வளர் தைலம்

மருதாணி இலை -- 4 பிடி
நல்லெண்ணெய் -- 1 போத்தல்

மருதாணி இலையை காம்பு இல்லாமல் ஆய்ந்து அம்மியில் வைத்து நன்றுக அரைக்கவும். வெண்ணெய்போல நன்றுக அரைக்கப்பட்டதும், அதை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு மேலான அமைப்புடையவனென்னும் அப்பர் பெருமானை மறக்கவும் படுமா?

''மனித்தப்பிறவியும்
வேண்டுவதே
இந்த மாநிலத்தே''

பாருங்கள்! ஆகாயச் சந்திரனைப்பற்றி நன்கு ஆய்வோம். பிறவி அழிய உயிரழியாது. அப்போது அரிய துணை வேண்டும். தீமைகளைச் செய்வோரும் சங்கரா நீயே துணையென்றால் பங்கமில் அருள்மழை பொழிந்து காப்பவர் கைலாசபதியே.

இலங்கைவேந்த னிருபது
தோளிற
விலங்கைசேர் விரலான்
விசயமங்கை
வலஞ்செய்வார்களும்
வாழ்த்திசைப்பார்களும்
நலஞ்செய்வாரவர்
நன்னெறி நாமமே.

தாண்டகச்சதுரர் திருநாவுக்கரசரே. அருள்காட்டும் விடந்தீர்பதிகம், கோளறு பதிகம் போன்ற செழும் பயன்றரும் தேவாரம் பாடினுற் பலன் கிட்டாது. மன அன்புருகிப் பாடலே நலம். ''மதியஞ்சூடும் ஐயனுர்க்காளாகி- யகங் குழைந்து மெய்யரும்பியடிகள் பாதம்- கையினுற் றெழுமடியார் நெஞ்சினுள்ளே- கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே.'' அப்பரடிகள் தோத்திரங்களில் திருவுளம் வைத்த சிவபிரானுர் பல்லாண்டுகள் அவரை வாழவைத்தார்.

அப்பரடிகள் ஐந்தாந்திருமுறையில் 4, 5, 6 ஆகப் பகுக்கப்பட்ட அற்புதங்களும் பல. திருஞானசம்பந்தரின் பெருமதிப்பு திருநாவுக்கரசு நாயனுருக்கு மிக உதவியாருந்தது. தாம் அடைந்த துன்பத்தையும், தமக்குக்கிடைத்த இறைவனருளையும் வியப்பார்.

கல்லினுெடெனைக்கட்டி
அமண் கையர்
ஒல்லைநீர்புக நூக்க
என் வாக்கினுல்
நெல்லு நீள்வயல்
நீலக்குடியரன்
நல்லநாமம் நவிற்றி
யுய்ந்தேனன்றே

ஆருந்திருமுறையில் அப்பரடிகள் அஞ்சா நெஞ்சும், வஞ்சனை செய்வாரை வெற்றி கோடலும், மக்கள் இன்பமடையும் வழியும் பிறவும் திறம்படக் கூறியுள்ளார்.

திருக்குறளில்,

''தனக்குவமை யில்லாதான்
தாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது.

என்பது போன்ற சில ஒற்றுமைச் செம்மையும்வருவதை நோக்கலாம். தெய்வசிந்தனையின்றி உண்டு உடுத்து பஞ்ச மாபாதகங்களைப் புரிவோர் சற்றுச் சிந்திப்பார்களாக.

குளிர்ந்தனவே

பத்தாந்திருமுறை திருமந்திரம் என்பது. இத்திருமந்திரம் முழுதும் யோக சாதனைகளையும் இறைவனின் குன்றுத அருட்செறிவில் வேதாகம நுண்பொருள்களையும் தத்துவ நிலைகளையும் புகலும்.

அப்பணி செஞ்சடை
ஆதிபுராதனன்
முப்புரமெய்தனன்
என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது
மும்மல காரியம்
அப்புரமெய்தமை
யாரறிவார்களே

நீதிகள் தேக அனித்தியத் தன்மைபோன்றனவும்விளக்கமாகும். பத்தாந்திருமுறை நாற்பது பிரபந்தத்தொகுப்புக்கள் பதினேராந் திருமுறை ஆலவாயெம்பெருமானருளிச் செய்த ''மதிமலி புரிசைமாடக்கூடற், பதிமிசை என்பதாதியான அருள்பொழிச்செல்வம் சிவணியது'' - பதினேராந்திருமுறை, பன்னிரண்டாம்திருமுறை வளங்களை மலரில் வரைந்தோர் விளக்கியமை போற்றற்பாலது. சமுத்திர கலச நியாயம் பற்றிக் கோடற்பாலன பல.

பன்னிரண்டாந் திருமுறை பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழாரடிகள் அருளியது. ஆகப் பன்னிரு திருமுறைகளும் பன்னிரு பானுக்களின் பிரகாசம் வாய்ந்தன. முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளை வாழ்த்தி வணங்கி திருமுறைக் கழகமும் பொன்னுரைகளால் நன்னேயங்குதிகொள்ளத் தந்த அறிஞர்களும் நீடு வாழப்பிரார்த்திப்போமாக

மருதாணி இலை -- 4 பிடி
நல்லெண்ணெய் -- 1 போத்தல்

மருதாணி இலையை காம்பு இல்லாமல் ஆய்ந்து அம்மியில் வைத்து நன்ருக அரைக்கவும். வெண்ணெய்போல நன்ருக அரைக்கப்பட்டதும், அதை சிறு சிறு பில்லைகளாகத் தட்டி நிழலில் உலர்த்தி, நல்லெண்ணெயில் ஊறப்போடவும்.

நான்கு நாட்கள் எண்ணெயில் மருதாணி வில்லைகள் ஊறியதும் வாயகன்ற இரும்புச் சட்டியில் ஊற்றிக் காய்ச்சவும். காய்ச்சும் அளவிலே மருதாணி பில்லைகள் முறுகலாகிச் செக்கச் செவேலென்று சிவந்துவிடும். அந்தப் பதம் வந்ததும் எண்ணெயைக் கீழே இறக்கி ஆறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். இந்தக் 'கூந்தல் வளர் தைலம்' தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கவல்லது. தலைமயிர் உதிர்தல், வெளுத்தல் முதலியவைகளின்றிச் செழித்து வளரும் தன்மையுடையது இது.

மருதாணி இலையை அரைத்து கைவிரல் கால் விரல்களுக்கு இரவில் பூசி காலையில் எடுத்தால் நகங்கள் பளபளப்பான சிவப்புநிறம் பெற்று விளங்கும்.

## ஆணுக்குப் பெண் அடிமையல்ல

—செல்வி ஜீவா கனகசுந்தரம்.

பெண்கள் ஆண்களுடன் சரிநிகர் சமானமாக வாழவேண்டும். ஆண்டவன் படைப்பிலே ஆணும், பெண்ணும் சமமானவர்கள். இயற்கை நியதியே அப்படி இருக்கையில் பெண்கள் ஏன் ஆண்களுக்கு அடிமையாக வாழவேண்டும்? சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனதும் தனிச்சொத்து. ஆண்களுக்குள்ள சுதந்திரம் பெண்களுக்கும் உண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது!

கூடாது. 'அடக்கத்துடன் வாழ்; ஆனுல் அடிமையாக வாழாதே' என்றநன்மொழிக்கிணங்க, பெண்கள் தமக்கே உரித்தான நற்குணங்களுடன் அடக்கமாக வாழவேண்டுமேயொழிய அடிமையாக வாழக்கூடாது.

அன்று பெண்களைப் படிக்கவைக்காது வீட்டினுள்ளே பூட்டிவைத்தார்கள். அதன் காரணமாக பெண்கள் உலகமறியாது மனிதரை அறியாது தமது கணவன்மார்க்கு அடிமைகளாக வாழ்ந்து தம் வாழ்வையே பாழாக்கினுர்கள். கல்வி அறிவில்லாத காரணத்தால் பெண் ஆணுக்கு சரிநிகர் சமானமாக வாழ




ஆணுக்குள்ள சுதந்திரம் பெண்ணுக்கும் உண்டென்பதை பாரதியார்' மட்டுமல்ல பாரதிதாசன், அறிஞர் அண்ணு இன்னும் பலர் வலியுறுத்தியுள்ளார்கள். அறிவிற் சிறந்த, உலகம் போற்றும் உத்தமர்களே இப்படிக் கூறியிருக்கையில் இன்னும் ஏன் பெண்கள் அடிமை வாழ்வு வாழவேண்டும்? ஆணுக்குப் பெண் அடிமையென்று எந்த ஏட்டில் எழுதப்பட்டிருக்கிறது? எந்த ஒரு ஆணும், பெண்ணும் தனக்குள்ள சுதந்திரத்துடன் வாழவேண்டுமேயொழிய ஒருவருக்கொருவர் அடிமையாக வாழக் முடியவில்லை. ஆனுல், இன்ருே! ஆணைப் போலவே பெண்ணும் கல்விபயில்கிருள், உத்தியோகம் பார்க்கிருள். ஆணைப்போல எந்த ஒரு வேலையைச்செய்யவும் முன்வந்திருக்கிருள். இந்த வீரசக்தியின் மூலம் பலனைப் பெருது, தன்சுதந்திரத்தையே ஆணுக்காகத் தியாகம் செய்து அடிமை வாழ்வு வாழவேண்டுமா? பல இன்னல்களுக்கிடையே ஆணின் நிலையை எட்டிப்பிடித்தும் பின் அவனுக்கு அடிமையாக வாழ்வது தகுமா?

''சமூகம் என்ற முகத்திலே ஒளிவீசும் இரு கண்கள் ஆணும் பெண்ணும்'' வாழ்க்கை எனும் படகிலே கணவனும் மனைவியும் வேற்றுமையின்றிசமபாதி உரிமை பகிர்ந்து வாழ்ந்தால்தான் வாழ்க்கைப்படகு இடையூறின்றி நீந்திச்செல்லும். குடும்பம் என்ற கோயில் சுடர்விட்டுப்பிரகாசிக்கும். ஆண்மையும், ஆணுக்குச் சரிநிகர் சமானமாக பெண் தன்பலத்துடன் வாழ்ந்தால் தான் தவறுசெய்யும் தன் கொழுநனை திருத்தி நல்வழிப்படுத்தி, அவனுக்கு ஆபத்துவந்தபோது அதனின்றும்அவனைக்காப்பாற்றி உத்தமப்புதல்வனைப்பெற முடியும். அடிமை வாழ்வு வாழும் ஒரு பெண் தனதுவாழ்வையும்பாழாக்கி வருங்காலச் சமுதாயத்தை ஒளிமயமாக்கும் தன் புதல்வர்களையும் பாழாக்குகிருள். பிள்ளைகள்தாய்மாரின் குணங்களைப் பின்பற்றுவதால் தாயின் குணங்களே பிள்ளையினிடத்தும் பிரதிபலிக்கும். ஆகவே தாய்மார் கோழைகளாக வாழாது, தன்வீரத்துடன் சுதந்திரமாக வாழ வேண்டும். அப்போதுதான் பிள்ளையும் கோழையாயிராது சமுதாயம்ஒளிவிட்டுப் பிரகாசிக்க உதவிபுரிகிருள். இதன்காரணமாக பெண்ணுனவள் தனி ஒருமனிதனுக்கு மட்டுமல்ல, சமுதாயத்திற்கே சேவைசெய்தவளாகின்ருள். இதை விடுத்து சுதந்திரமின்றி அடிமை வாழ்வு வாழ்ந்தால் இவற்றையெல்லாம் சாதிப்பது எங்ஙனம்? தன்கொழுநனுக்குப் பயந்து அடிமையாக வாழ்ந்தால் குடும்பமானது எங்ஙனம் மலர்ந்து மணம் பரப்பமுடியும்? ஒரு பெண்ணுனவள் ஆணுக்கு அடிமையாய் இருந்து வாழ்வதைவிட மாய்ந்து மடிவதுமேல்.

### கருத்தரங்கம்

''தன்னுடையவாழ்க்கையை நிர்ணயிக்கும் சுதந்திரத்தை ஒரு பெண்ணுக்கு மறுக்கும் எந்தச்சமுகமும்விமோசனம் பெருது'' என்று நான்திடமாகக் கூறுகிறேன்! அடிமைகளாக ஒருபோதும் வாழ முற்படக்கூடாது. மக்கள் அடையக்கூடிய பேறுகளில் சுதந்திரமே உயர்ந்தது. அச் சுதந்திரம் உறுப்புக்களில் உயர்ந்த கண்ணிலும் மேலானது. பிறப்புரிமையான சுதந்திரத்தைப் பாரதியார் ''கண்ணிலும் இனிய சுதந்திரம் போனபின் கைகொட்டிச் சிரிப்பாரோ'' என்று பாடியுள்ளார். செல்வர்களாக வாழ்வதிலும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதிலும் சுதந்திரமாக வாழ்வதே மேலானது.

இன்றும் பல குடும்பங்களில் பெண் ஆணுக்கு அடிமையாக வாழ்வதைக் காணமுடிகிறது. பாரதியார் இன்று இருந்தால் அந்த அடிமை விலங்கை அறுத்தெறிந்து அவர்கட்கு விடுதலையளித்திருப்பார். அடிமைப் பெண்களே! இனியும்

(6ம் பக்கம் பார்க்க)

## எங்களை வாழ விடுங்கள்

''பாரதக் கதையையும் சங்ககாலத்தையும்திரும்பத் திரும்பச் சொல்லி, அன்றுதான் சிறந்த நாகரிகம் இருந்தது; இன்று அழிந்துவிட்டது என்று கூறுகிறீர்களே! இன்று நாங்கள் நாகரிகமாக வாழ்வது பிடிக்கவில்லையா? எங்களை மீண்டும் பின்னே தள்ளாது வாழவிடுங்கள்'' என்ற வாதியின் கூற்றுக்கு ''அன்று திரௌபதை பதினுறு முழச்சேலை உடுத்திருந்தபடியால், கிருஷ்ணர் வரும்வரையில்அவரது மானம் நின்றிருந்தது. ஆனுல் இன்று மினிஸ்கேட் அணிந்திருந்தாலோ அப்பப்பா...!எப்படிச்சொல்வது என்றுபதிலடி கொடுத்தார் பிரதிவாதி.

கடந்த புதன்கிழமை வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கும் யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களுக்குமிடையில் ''தமிழர் நாகரிகம் வளர்கிறதா! வீழ்கிறதா! என்ற விவாதத்தின் போது மேற்கண்ட வாதங்கள் எழுந்தன. செல்வி பத்மசோதி தலைமையில் நடைபெற்ற இவ்விவாதத்தில் செல்விகள் மு. சாந்தா, சு. பிரேமா, செ. பாக்கியலட்சுமி ஆகியோர் வாதிகள் சார்பிலும், செல்வன் து. கணேஸ்வரன், கு. தனராசா, சூ. சிமகருத் ஆகியோர் பிரதிவாதிகள் சார்பிலும் கலந்து கொண்டனர். விவாத இறுதியில் தேநீர் விருந்தும் இடம்பெற்றது.

என்று தசரதன் உள்ளம் ஏங்கி வரண்டுவிட்டது. அவன் கண்களுக்கு முனிவன் முனிவனுகத்தோன்றவில்லை. கேட்கும்போது 'நால்வரினும் பெரிய' என்று கேட்காமல் 'கரிய' என்று கேட்கவைக்கின்ருன் கம்பன். **நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத்தந்திடுதி** என்று குறிப்பிட்டுப்பேச்சை முடிக்கின்ருன் முனிவன். இப்போ முனிவன் தோற்றம் கூற்றமாக அமைகின்றது மன்னனுக்கு. அதுவும் யமனுக வந்து உயிரை யாசிப்பதுபோன்று,

**உயிர் இரக்கும் கொடுங்**
**கூற்றின்**
**உளையச் சொன்னுன்**

என்கிற கவிஞன் உடனே தசரதனுக்கு பல்லாண்டுகட்கு முன் நிகழ்ந்த சம்பவம் ஒன்று மனக்கண்ணில் ஓடிவருகின்றது.

**உள் நிலாவிய துயரம்பிடித்து வந்த** உள்ளத்தில் நீறுபூத்த நெருப்பாயிருந்ததாம் ஒரு துயரம். அது என்ன?

(தொடரும்)

## காந்திஜி......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாட்சி. எடுத்துக்கொண்ட விடயத்தில் கூடிய கவனம், தனதியக்கம்பற்றி திரும்பத் திரும்ப வற்புறுத்தல், மாறுபட்ட கருத்துக்களை எடுத்துக்கூறும் எதிராளிகளுச்கு உண்மையை எடுத்துவிளக்கும் தன்மைபோன்ற பல்வேறு உயர்பண்புகளைப் பத்திரிகைத்தொழிலின் ஒரே நோக்கம், சேவையெனக் கொள்ளும்தர்மம் மகாத்மா காந்தியிடத்தன்றி ஒரு பத்திரிகையாளரிடம் காணுதல் அரிது.

ளப்பெண் தேவை. தமிழறிவு இருந்தால் விரும்பத்தக்கது. விளம்பர இலக்கம்: 750, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 750

கடைச்சல் தொழிலில் நன்கு அனுபவமுள்ள ஒரு இளைஞர் தேவை. எழுத்தில் விண்ணப்பிக்கவும். நோர்தேன் இன்டஸ்ட்ரீஸ், 8/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 737

விற்பனைக்கு

காணி

யாழ். அரசாங்க செயலகத்திற்கு அடுத்தாற்போல 89, கண்டி வீதியிலிருக்கும் காணியில் (கச்சேரி லேனுடன்) 3 பரப்பு உடனடியாக விற்பனைக்குண்டு. வீடு கட்ட வர்த்தக ஸ்தாபனங்கள் நிறுவ தகுந்த இடம். விபரங்களுக்கு திரு. மு. மயில்வாகனம், 197, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 727

பரியாரி கமம் 6 ஏக்கர். எல்லை கிழக்கு - வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் ஆதனம். தெற்கு - ரோட்டு. மேற்கும் வடக்கும் குளம். மாந்தை தெற்கு, மாந்தை டிவிஷன், மன்னர் டிஸ்றிக், வடமாகாணம். நல்ல விளைவான காணி. உடன் விற்க விரும்புகிறேன். நேரே தொடர்புகொள்ளவும். S.S. பொன்னையா, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை. 735

காணி

வண்ணுர்பண்ணை கல்லூரி ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 45, புங்கங்குளம்ரோட், யாழ்ப்பாணம். 747

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரீ சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

வெளிவந்துவிட்டது!
இலகு அட்சர கணிதம்
(உயர்தர வகுப்புகளுக்குரியது)
(1962 – 1967 க. பொ. த. தூயகணிதம் 1 வினுப்பத்திரங்களையும் கொண்டுள்ளது)
ஆக்கியோர்:
ஈப்பென் & கோவிந்தபிள்ளை
விலை ரூபா 6-05
வி. பி. பி. ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
கிடைக்குமிடம்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, கே. கே. எஸ், ரோட்,
யாழ்ப்பாணம்.
1220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவர சாரம் அரசியல் நருப

# இந்திய-பாகிஸ்தானில் அதிகரிக்கும் மாநில சுயாட்சிக் கோரிக்கை

## முன்னேற்றத்துக்கு உலக நாடுகள் காட்டும் நிர்வாகப் பரவல் நமக்கும் அவசியம்

நமது நாடு அரசியல் சுதந்திரம் பெற்று இருபதாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இந்த இருபதாண்டுகளில் ஐந்து பொதுத்தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. சேர். ஜோன்கொத்தலாவலைதலைமையில் சிறிது காலமும் டாக்டர் டபிள்யு. தகநாயகா தலைமையில் இடைக்கால அரசாங்கமும் ஆட்சி பீடத்திலிருந்தது தவிர சேனநாயகாக்களின் அரசாங்கங்களும் பண்டாரநாயகாக்களின் அரசாங்கங்களும் தான் ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் அதிகாரப் போட்டியில் வெற்றியீட்டுவதற்காக இந்தியர் பிரச்னை, மொழிப் பிரச்னை போன்ற இன, மொழிப் பிரச்னைகளே தலைதூக்கியிருக்கின்றன. தேர்தலில் வெற்றிபெறுவதற்கு இன, மொழிப் பிரச்னைகள் தான் சுலபமான வழி என்பதை அரசியல் வாதிகள் நன்கு தெரிந்துகொண்டனர். இதற்கு இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்புத் தான் மூலகாரணம்.

### கருத்தை மாற்றினர்

தேசீய ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்கும் பொருளாதாரத்தில் நாடு முன்னேறுவதற்கும் ஒற்றையாட்சி அமைப்பு இலங்கைக்குப் பொருந்தாது என்று காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா பலவருடங்களுக்கு முன்னரே கருத்துத் தெரிவித்திருந்தார். ஆயினும் அரசியல் ஆதிக்கப் போட்டியில் வெற்றிபெறவேண்டுமானால் இந்தக் கருத்தை மாற்றித்தானாக வேண்டுமென்பதை உணர்ந்துகொண்ட அவர் 'ஒற்றையாட்சிதான் சரி' என்று கூறத்தொடங்கினார். ஒற்றை ஆட்சி அமைப்பை மாற்றி சமஷ்டி ஆட்சி அமைப்பு ஏற்படுத்தினால்தான் இங்கு தமிழ்பேசும்மக்கள்சகல உரிமைகளுடன் சுதந்திரமாக

சமீபத்தில் கோரியிருந்தது. அரசியல் அமைப்பில் திருந்தம் செய்ய வேண்டுமென்று முன்னைய அரசாங்கங்கள் கூறிவந்தன. இன்றைய அரசாங்கமும் அதையே கூறி முன்னர்போலவே ஆட்சி மன்றத்தின் இருசபைகளையும் கொண்ட தெரிவுக் குழுவும் இதுபற்றி ஆராய்ந்து சிபார்சு செய்வதற்கு நியமிக்கப்பட்டது. 'பிரிவி கவுன்சில்' அப்பீல் தீர்ப்பு ஒன்றைத்தொடர்ந்து இந்த அரசியல் அமைப்பில் மாற்றம் செய்வதில் பயனில்லையென்றும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படவேண்டுமென்றும் எதிர்க்கட்சியினர் கோருகின்றனர். இதனால் அரசியல் அமைப்பைத் திருத்துவது பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்ய நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவைப் பகிஷ்கரித்துவிட்டனர்.

### அரசியல் அமைப்பு மாறத்தான் வேண்டும்

இன்றைய அரசியல் அமைப்பைத் திருத்தவேண்டுமென்று கூறுவோரும், இந்த அரசியல் அமைப்பை ஒதுக்கிவிட்டு புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டுமென்று கூறுவோரும் தங்கள் கோரிக்கைக்கு வெவ்வேறுகாரணங்களைக் கொண்டுள்ளனர்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா முன்னர் தெரிவித்த சமஷ்டி ஆட்சிஅமைப்புயோசனையை பின்னர் கைவிட்டபோதிலும் நாட்டின் நிர்வாகம் ஒரே இடத்தில் குவிந்திருந்தால் நாட்டின் முன்னேற்றம் தடைபடுமென்றும் ஊழல்கள் மலியுமென்

அமைச்சராக பெரிய சேனநாயகா மந்திரிசபையில் அவர் பதவி வகித்தபோது அதற்கு முன்னிருந்ததைவிட உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கினார். இதனால் 'உள்ளூராட்சி சேவையின் பிதா' என்றும் பெயர்பெற்றார். நாட்டின் நிர்வாகம் மத்திய அரசாங்கத்திடம் மட்டும் குவிந்திருக்காமல் பரவலாக்கப்படவேண்டுமென்ற கருத்தைக்கொண்டிருந்ததால் தான் தமிழரசுக்கட்சியினருடன் 1957-ம் ஆண்டில் செய்துகொண்ட ஒப்பந்தத்தில்பிரதேசசபைகள்அமைப்பதற்கு ஒப்புக்கொண்டார். துரதிர்ஷ்டவசமாக இது நிறைவேறாமல் போய்விட்டது. இதற்குப்பின்னர்ஆட்சிக்குவந்த திருமதி பண்டாரநாயகாவின் அரசாங்கமும் அடுத்து இப்போது ஆட்சிபீடத்திலுள்ள தேசீய அரசாங்கமும் 'மாவட்ட சபைகள்' அமைக்க ஒப்புக்கொண்டும் அரசியல் ஆதிக்கப்போட்டி அதை நிறைவேற்றத் தடையாக அமைந்துவிட்டது.

### சோவியத்தும் அமெரிக்காவும்

சோஷலிஸக்கொள்கையையுடையகம்யூனிஸ்ட் நாடான சோவியத் யூனியனிலும் ஜனநாயகத்தைப் பின்பற்றும் 'முதலாளித்துவ' நாடான அமெரிக்காவிலும் சமஷ்டி ஆட்சி அமைப்புத்தான் அமுலிலிருக்கிறது. ஒரே இடத்தில் அதிகாரம் குவித்து வைக்கப்படவில்லை. நிர்வாகம் பரவலாக்கப்பட்டிருக்கிறது. உலகின் இதர பல சோஷலிஸ, ஜனநாயக நாடுகளிலும் நிர்வாகம் ஒரே இடத்தில் குவித்துவைக்கப்படா

பதால் அந்த நாடுகள் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளன.

இந்தியாவில் ஒருவித சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையே இருப்பினும் அங்கும் மாநில அரசாங்கங்களுக்குப்போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. மத்திய அரசாங்கத்திடம் அதிகாரங்கள் குவித்துவைக்கப்பட்டிருப்பதால் மாகாணங்களின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. இதனால் மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண அரசாங்கங்களுக்கிடையிலும் நல்லுறவு நீடிக்காமலும் மக்கள் மனதில் அதிருப்தியும் அவநம்பிக்கையும்தோன்றுகின்றன. மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் குவிந்திருப்பதால் மாநிலங்கள் விருத்தியடையமுடியாமலிருந்ததும் மக்களின் அதிருப்தி வளர்ந்ததும் தான் பல மாநிலங்களிலும் மத்திய அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் பல மாநிலங்களிலும் சென்றபொதுத் தேர்தலிலும் பின்னர் இடைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் தோல்வியடைந்ததற்குக் காரணம்.

காங்கிரஸ் அல்லாத அரசாங்கங்கள் ஆட்சிபீடத்துக்கு வந்துள்ள மேற்கு வங்காளம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் இப்போது மாநில சுயாட்சி கோரத் தொடங்கியுள்ளன. எதற்கும் மத்திய அரசாங்கத்தையே எதிர்பார்த்திருக்கும் நிலையினால் மாநிலங்கள் மட்டுமல்ல நாடே முன்னேற முடியாமலுள்ளது.

### அண்ணாவின் உயில் சுயாட்சி

மாநில சுயாட்சிக்காக பிரசாரம் செய்வதுதான் நம்

அமரர் அண்ணாதுரை எழுதி வைத்த உயில் என்றும் அதை அமுல்நடத்த ஆட்சியில் உள்ளவர்கள் முன்வரவேண்டுமென்றும்தமிழ்நாடு தமிழரசுக்கழகத் தலைவர் திரு. ம பொ. சிவஞானகிராமணி தமிழ்நாடு சட்டமன்றத்தில் தெரிவித்திருப்பதுடன் மாநில சுயாட்சி கோரி எழுச்சி நாள் கொண்டாடவேண்டுமென்றும் உறவுக்குக் கைகொடுக்க மத்திய அரசாங்கம் தயாராக இருப்பினும் உரிமைக்குரலுக்குக் காது கொடுக்கத்தயாரில்லையென்றும் கூறியிருக்கிறார். மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கக்கூடியதாக இந்திய அரசியல் அமைப்புத்திருத்தப்பட வேண்டுமென தமிழ்நாடு நிதிமந்திரி திரு. கே. ஏ. மதியழகனும் சட்டமன்றத்தில் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### பாகிஸ்தானிலும் கோரிக்கை

பாகிஸ்தானில் அயூப் ஆட்சிக்கு எதிராக பெரும் கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் வெடித்துக்கிளம்பியதற்கு ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதும் மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டதும் தான் முக்கியகாரணம். கிழக்குப் பாகிஸ்தானுக்கு சுயாட்சி உரிமை வழங்குவதுடன் மேற்குப் பாகிஸ்தானை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கையில் எட்டு எதிர்க்கட்சிகளுக்குமிடையில் பூரண உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் கிராம சுயாட்சி வழங்கப்படவேண்டுமென்றகோரிக்கை பூதான இயக்கத்தலைவர் வினோபாஜி சர்வோதய இயக்கத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஜ் நாரயண் போன்றவர்களினால் எழுப்பப்பட்டுவருகிறது.

### பாதுகாப்பும் வெளிவிவகாரமும்

நாட்டின் பாதுகாப்பு, வெளிவிவகாரம் ஆகியவைகளை மத்திய அரசாங்கம் வைத்துகொண்டு கல்வி, சுகாதாரம், அபிவிருத்தி முதலிய இதர அதிகாரங்களை அந்தந்த மாநில, மாகாண மாவட்ட, உள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் அந்தப் பகுதி மக்கள் தங்களின் முன்னேற்றத்துக்காகவும், தங்கள் பகுதிகளின் விருத்திக்காகவும்உழைப்பார்கள். இதனால் நாடுமுழுவதும் முன்னேற்றமடையும். உலகில் பல நாடுகளும் முன்னேற்றமடைந்திருப்பதற்கு இதுவே பெரும்பாலும் காரணம். நாட்டுப்பற்றும் மக்களிடம் அதிகரிக்கும்.

நமது நாட்டுக்கு இன்று வேண்டியதும் நிர்வாகப்பரவல்தான்.

---

### ரயில்கள் தாமதத்திற்கு காரணம்

அளவெட்டி, திங்கள்

புகையிரதம் தாமதமாக ஓடுவதற்கு நிலக்கரி இறக்குமதி செய்யாததே காரணமாம்.

தற்போது புகைவண்டிகள் தாமதமாக வருவதால் பிரயாணிகள் கஷ்டமடைந்து வருவது அறிந்ததே.

இதுபற்றி நமது நிருபர் ஒரு புகையிரத அதிகாரியிடம் விசாரித்தபோது நிலக்கரி இப்போது இலங்கைக்கு இறக்குமதி செய்ய தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், இதனால் விறகில்தான் புகைவண்டிகள் ஓடவேண்டியுள்ளதென்றும் இதனாலேயே புகைரதங்கள் தாமதித்து வருகின்றனவென்றும் அவர் கூறினார்.

### கீரிமலையில் சைவ பாதுகாப்பு மகநாடு

அளவெட்டி, திங்கள்

---

கொழும்பில் இந்து மாமன்றத்துக்கு

### மூன்றுமாதத்துக்குள் காணி கையளிக்கப்படும்

கொழும்பு, திங்கள்

கொழும்பு பார்சன்ஸ் வீதியில் இந்து மாமன்றத்துக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள காணி மூன்று மாதத்துக்குள் சட்டபூர்வமாகக் அரசாங்கத்தினால் கையளிக்கப்படும்.

நேற்று அரசாங்கம் இந்து மாமன்றத்துக்கு வழங்க இருந்த காணித்துண்டு இறுதி நேரத்தில் ஏற்பட்ட முட்டுக் கட்டை காரணமாக கையளிப்பு பின் போடப்பட்டது.

அரசாங்க ஊழியர் சங்கத்தின் டெனிஸ் விளையாட்டுத்திடல் குறிப்பிட்ட காணியில் இருப்பதால், வேறொரு இடத்தில் டெனிஸ் திடல் நிறுவித்தரவேண்டுமென்று மேற்படி சங்கம் கோரியதால் காணித்துண்டை காரியாதிகாரி திட்டமிட்டபடி கையளிக்க முடியாது பாய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இந்துமாமன்றத்துக்கு காணித்துண்டை வழங்க கொழும்பு மாவட்ட அதிகாரி திரு. ராஜகருணா தமது அதிகாரிகளுடன் ஸ்தலத்துக்குவந்தபோதுகாணித்துண்டை தற்சமயம் பாவித்துவரும் அரசாங்க ஊழியர் விளையாட்டுக் கழகத்தினர் உடனடியாக அக்காணித் துண்டை கையளிக்கமுடியாது எனத்தெரிவித்தனர்.

---

### மாதர் முன்னணி நிர்வாகிகள்

அளவெட்டி, ஞாயிறு

காங்கேசன்துறையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தமிழரசு மாதர் முன்னணி நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் செல்வி தேவநாயகிஅம்பலப்பிள்ளை, செயலாளர்: செல்வி விஜயலட்சுமி குருசாமி, துணைச் செயலாளர் செல்வி திலகமணி திருமால், துணைதலைவர்: செல்வி சிவபூரணம் தெட்சணாமூர்த்தி. பொருளாளர்: திருமதி சேனதிராசா. ஆறு பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

### பருத்தித்துறை பாடசாலைகள் போட்டி

வல்வெட்டித்துறை, ஞா.

பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி நேற்று ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அதில் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண் பாடசாலையைச் சேர்ந்த 13வயதுக்குட்பட்ட மாணவர்கள் பங்கு பற்றி முதலாவது


இனுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

MANOHARA
JAFFNA
Dailyat: 4-45, 7-00
& 9-45 p.m.
Pre-poya, Poya 10-30 a.m.
Warren Beatty
in
BONEIEAND
CLYDE
(Aduts only) (Techni color)

REGAL at Jaffna
Daily at 4-45, 7-00 & 9-45, p. m
Rita Tushingham &
Oliver Reed
in
THE TRAP
(Adults)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
குடியிருந்த
கோயில்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி ஜெமினி
சாவித்திரி
நடித்த
கப்பலோட்டிய
தமிழன்
(புதிய கொப்பி)

57வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பதை உணர்ந்து கொண்ட அவர் 'ஒற்றையாட்சிதான் சரி' என்று கூறத்தொடங்கினர். ஒற்றை ஆட்சி அமைப்பை மாற்றி சமஷ்டி ஆட்சி அமைப்பு ஏற்படுத்திஞல்தான் இங்கு தமிழ்பேசும்மக்கள்சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழமுடியும் என்று கூறி சமஷ்டி கோரிக்கையைவைத்து தமிழ்பேசும் மக்களைமட்டும் கொண்ட தமிழ் அரசுக் கட்சி தோன்றியதும் இதற்கு தென் னிலங்கையில் எதிர்ப்புத் தோன்றியதும் திரு. பண்டாரநாயகா தமது 'சமஷ்டி அமைப்பு'க் கருத்தை மாற்றிக்கொள்வதற்கு மூலகாரணம் என்று சொல்லலாம்.

ஆர். டி. பண்டாரநாயகா முன்னர் தெரிவித்த சமஷ்டி ஆட்சிஅமைப்புயோசனையை பின்னர் கைவிட்டபோதிலும் நாட்டின் நிர்வாகம் ஒரே இடத்தில் குவிந்திருந்தால் நாட்டின் முன்னேற்றம் தடைபடுமென்றும் ஊழல்கள் மலியுமென்றும் கருதினர். உள்ளூராட்சிதான் அமுலிலிருக்கிறது. ஒரே இடத்தில் அதிகாரம் குவித்து வைக்கப்படவில்லை. நிர்வாகம் பரவலாக்கப்பட்டிருக்கிறது. உலகின் இதர பல சோஷலிஸ, ஜனநாயக நாடுகளிலும் நிர்வாகம் ஒரே இடத்தில் குவித்துவைக்கப்படாமல் பரவலாக்கப்பட்டிருப்

...மட்டுமல்லநாடே முன்னேற முடியாமலுள்ளது.

## அண்ணுவின் உயில் சுயாட்சி

மாநிலசுயாட்சிக்காக பிரசாரம் செய்வதுதான் நம் முடையவேலை என்பதுதான்

...கோரிக்கையில் எட்டு எதிர்க் கட்சிகளுக்கு மிடையில் பூரண உடன்பாடு ஏற்பட்டிடுக்கிறது.

இந்தியாவில் கிராம சுயாட்சி வழங்கப்படவேண்டுமென்றகோரிக்கை பூதான இயக்கத்தலைவர் விஞேபாஜி சர்வோதய இயக்கத்தலைவர்

ளதென்றும் இதனுலேயே புகைரதங்கள் தாமதித்து வருகின்றனவென்றும் அவர் கூறினர்.

## ஐவர்ஜெனிங்ஸ் தவறை உணர்ந்தார்

இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொடுத்த சேர். ஐவர் ஜெனிங்ஸ் சில ஆண்டுகளின் பின்னர் தாம் தவறு செய்துவிட்டதாகவும் இந்த ஒற்றையாட்சி அமைப்பு இலங்கைக்குப்பொருந்தவில்லையென்றும் தெரிவித்திருந்தார். சமஷ்டி ஆட்சி அமைப்பு இலங்கைக்குப் பொருந்தாதென்று கூறுபவர்களும்கூட இன்றுள்ள அரசியல் அமைப்பு சரியல்லவென்றும் இதை மாற்ற வேண்டுமென்றும் கூறத் தொடங்கியுள்ளனர். தேசீய ஐக்கியத்தையும் நாட்டின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு இன்றைய அரசியல் அமைப்பைமாற்ற வேண்டுமென அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்

# சனி பகவான்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி

பதினெராம் இராசி தேசிய சோதிடத்தில் பிரதிநிதிகள் சபை, பிரபுக்கள்சபை சட்டப் பிரிவு, இவற்றைத் தன்னுள் அடக்கும் நூல் தேசிய சோதிடம். சனீஸ்வரன் 5-3-69 காலை 5-30 மணிக்கு மீன இராசியில் 29 பாகை 44 கலையில் நின்றிருக்கின்ருர். இது மேட இராசியைத் தாவும் ஒரு உத்திநிலையாம். எனவே மேட இராசிச் சஞ்சாரநிலையென்றே கூறலாம். இலங்கை இராசியின் பதிஞேராவது இராசி முதல் கட்டத் தாக்குதலுக்குள்ளாக வேண்டிய காலம் இது. கடந்த 5-3-69ல் இலங்கைப் பிரதிநிதிகள்சபையில் அமளி துமளி என்று பத்திரிகை வாயிலாக அறிந்தோம். சனியின் தாக்குதலிஞல் இலங்கை ஆட்சி இராசியின் 11வது இராசி நலிவுற்றதே இதற்குக் காரணமாகும்.

மேலும் சனிபகவானின் மேடஇராசிச்சஞ்சாரத்தால் இலங்கையில் புகையிரதப் பகுதி, தபால்பகுதி, சட்டப்பகுதி சுகாதாரப்பகுதி ஆகிய பகுதிகள் ஓரளவு பாதிப்புக்காணும். பிரசுரம், அச்சுயந்திரம் ஆகிய பகுதிகளில் பிரச்சினைகள் தோன்றும் வயது முதிர்ந்த நீதவான், சமயகுரு, பிரபல தலைவர் இவர்களில் சிலரின் மறைவையும் நீங்கள் எதிர்நோக்கலாம். விபத்து, நீரிஞல் நெருப்பிஞல் அழிவு, கள்வர் பயம் இவை அதிகரிக்க இடமுண்டு. ஏழாவது இராசிக்குரிய விடயங்கள் செயல்படுவதற்கு மில்லை. எனவே ஆட்சியாரிடைச் சிறு பிளவுகள் தோன்றி மறையும். பிறதேசத்துடனுள்ள இராசதந்திர உறவுகளில் சில பாதிப்பையும் காணலாம். பங்குதாரரும் சிறிது பாதிப்பு காண்பர்.

சனீஸ்வரன் 1-7-69காலை 6. 20 மணிக்கு மேட இராசியில் பரணி நட்சத்திர பிரவேசம் செய்வார், 21- 8- 69ல் சனிபகவான் வக்கிர கெதிக்குள்ளாகித் திரும்பவும் 12- 10-69 பிற்பகல் 4- 20 மணிக்கு அச்சுவினி நட்சத்திர பிரவேசஞ் செய்கின்ருர். சனி அச்சுவினி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும்கலத்தில் கூடுதலான கஷ்ட பலனையே இலங்கை எதிர் நோக்கவேண்டிவரும். சனி நீசபாஷைஎன்ற கணிப்புக்குள்ளாகும் ஆங்கில பாஷைக்குத் தலைமை தாங்குவார். இவரின் பாதிப்பு நிலை ஆங்கிலபாஷையின் முக்கியத்துவத்தைக் குன்றச் செய்யும்.

சனிபகவானின் கொடூரக் கிரணங்கள் 1-7-69ன்மேல் குறைவுபடும் என்பது எமது துணிபு.

## இன்று

பன்றித்தலைச்சி அம்மன் கோவில் ஆலயப் பிரவேச இயக்கத்தை ஆதரித்து ஒரு பொதுக் கூட்டமொன்றை நடத்த, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தென்மராட்சிக் கிளை முடிவு செய்துள்ளது. திரு. எஸ். ரி. என். நாகரத்தினத்தின் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு. கே. டானியல், திரு. கே. ஏ. சுப்பிரமணியம், திரு வி, ஏ. கந்தசாமி, திரு. சி. கணேசன் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

# ஆயிரம் தடவையாக 'மயான காண்டம்'

## நேற்று மேடையேறியது

தெல்லிப்பழை, திங்கள் ஆயிரம்தடவை மேடையேற்றப்பட்ட பின்பும் தரம்குன்ருது இன்னும் எத்தனை தடவையும் பார்க்கக் கூடிய முறையில் இரசபாவம் பொருந்தியதாக மயானகாண்டம் விளங்குகிறது. ஈழத்து நாடக உலகில் சரச்சந்தரின் சிங்கள நாடகத்தைவிட மயான காண்டம் கூடியதடவை நாட்டின் பல பாகத்திலும் மேடையேற்றப்பட்டு சாதனை ஏற்படுத்தியிருக்கிறது.''

இவ்வாறு தேசிய நாடக நிறுவனத்தின் ஆதரவில் நேற்றுமாலை அரிச்சந்திர மயானகாண்டம் நாடகத்தினை 1000 தடவையாக மேடையேற்றப்பட்ட விழாவில் கலந்துரையாற்றுகையில் கலாநிதி சு. வித்தியானந்தன் கூறினர்.

மயானகாண்டம் நாடகத்தை தயாரித்த காங்கேசன்துறை வசந்தகான சபையையும், நடிகமணி வி. வி. வைரமுத்துவையும் பாராட்டுமுகமாக இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி திறந்த வெளியரங்கில் கல்லூரி ஆதிபர் தெ. து, ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. க. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கை தேசிய நாடக நிறுவனம் ஈழத்தில் தயாரிக்கப்படும் சிறந்த நாடகங்களை இன, மொழி, மத அடிப்படை வேற்றுமைகள் இன்றி மக்கள் மத்தியில் நாடகக்கலைக்கு ஆதரவு, ஊக்கம் பெறும் வகையில் பல பாகங்களிலும் மேடையேற்றி வருகின்றது. இவ்வகையில் தமிழ் நாடகத்துறையில் தனிச்சிறப்புடன் விளங்கும் மயானகாண்டம் நாடகம் 1000 தடவையாக மக்கள் முன்னிலையில் மேடையேற்றப்பட தேசிய நாடக நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. சாதாரணமாக ஒரு நாடகம் இரண்டாம் முறையாக மேடையேறுவது அருமை. ஒரு நாடகத்தை ஒரு தடவைக்குமேல் மக்கள் பணம் கொடுத்துப் பார்க்கமாட்டார்கள், ஆனல் மயான காண்டம் நாடகம் இவற்றுக்கு விதிவிலக்காக உள்ளது.''

எந்த நாடகமும் சிறப்பாக நடிக்கப்படும்போது நல்ல கதை கொண்டதாக அமையும்போது மதிப்பு உண்டு. மயான காண்டத்தில் சிறந்த கதை, நடிப்பு உண்டு. அரிச்சந்திரா புராணம் இருக்கும்வரை வைரமுத்துவின் மயான காண்டமும் இருக்கும் இவர் ஈழத்தில் தலைசிறந்த நடிகர். இன்றைய தேசிய நாடக நிறுவனத்தின் பாராட்டு, தேசிய அரசாங்கம் அளித்த பாராட்டாக அமைகின்றது.

மயான காண்டத்தில் முக்கிய பாத்திரமேற்று நடிக்கும் திரு. வி. வி. வைரமுத்துவுக்கு பொன்னுடை போர்த்திக் கௌரவித்த கலையரசு க. சொர்ணலிங்கம் கூறியதாவது:-

''இலங்கையின் நாடக வரலாற்றில் இன்று ஒரு பொன்னன நாள். இந்நாடகம் 1000 தடவையாக மேடையேற்றப் படுவது பாராட்டத்தக்க விடயமாகும். நாடகத்துறையை காங்கேசன்துறை வசந்த கானசபை கட்டி வளர்ப்பதைப்போல மற்றும் மன்றங்களும் நடிகர்களும் நாடகத்துறையை முன்னேற்றப் பாடுபட வேண்டும்'' என்ருர்.

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் ஆ. வ சதாசிவம் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. க. சச்சிதானந்தமும் உரையாற்றினுர்.

தேசிய நாடக நிறுவனத்தைச் சேர்ந்த திரு. காமினி விஜயசூரியா பிரதம விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொண்டார்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு வி. வி. வைரமுத்து நன்றி தெரிவித்துப் பேசினர்.

(குரு. அள. நிருபர்கள்(

## கீரிமலையில் சைவ பாதுகாப்பு மக நாடு

அளவெட்டி, திங்கள் மாபெரும்சைவபாதுகாப்பு மகாநாடொன்று இம்மாதம் 13-ம் திகதி கீரிமலையில் நடைபெற இருக்கிறது.

ஈழத்து உயர் சைவபீடம், அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்தசபை, அகில இலங்கை சைவாலய தர்மகர்த்தாக்கள் சபை, அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புசபை ஆகிய சபைகள் நடாத்தும். இம் மகாநாட்டில் ஆலயப்பிரவேசத்தின் இன்றைய நிலைபற்றியும், இவ்வருடம் திருவிழாக்களை சாத்வீக முறையில் நடத்துவதுபற்றியும் ஆராயப்படவிருக்கின்றன.

## ஆணுக்குப்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் உங்கள் அடிமை விலங்கினை அறுத்தெறியாது விட்டால் உங்கள் எதிர்காலப் பரம்பரையினடுப் மீளா அடிமைகளாவார்கள். நீங்கள்தான் அடிமைகளாக வாழ்ந்தாலும் உங்கள் சந்ததியினரையும் ஏன் அந்தப் பாதாளத் தினுள் தள்ளப் பார்க்கிறீர்கள்? சுதந்திர வாழ்வைப் பெருதோரை 'பாவியன்ருே நின்றன் பாலனம் படைத்திலாதார்' என்று பாரதிபழித்துரைக்கின்ருர்.

நிலையில்லாத இவ்வுலக வாழ்வில் பிறந்தோர் யாவரும் இறப்பது திண்ணம். அந்தச் சில நாட்களுக்கிடையில் உயிர் நீக்க, உடலழிய நேர்ந்தாலும் அடிமைகளாக வாழ முற்படாதீர்கள். எந்த இன்னல்கள் வந்தாலும் உங்கள் சுதந்திரத்தை இழந்து விடாதீர்கள். திடமான மனத்துடன் நற்குணங்களை மேற்கொண்டு சுதந்திரமாக வாழ்ந்து வாழ்க்கையை வளம்பெறச் செய்யுங்கள்.

அன்புச் சகோதரர்களே! 'பெண்களுக்கும் சுதந்திரம் உண்டு'' என்று பாரதியாரின் கொள்கையை இனி மேலும் பின்பற்றி இல்லற வாழ்க்கையை வளம்பெறச் செய்வீர்களா?

பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி நேற்று ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அதில் கலட்டி ரோமன் கத்தோலிக்க தமிழ் ஆண் பாடசாலையைச் சேர்த்த 13வயதுக்குட்பட்ட மாணவர்கள் பங்கு பற்றி முதலாவது இடத்தைப் பெற்றன. சென். தோமாஸ் பெண்பாடசாலை மத்திய பிரிவிலும், கீழ்ப்பிரிவிலும் பங்கு பற்றி இரண்டிலும் முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்டது.


(புதிய கோப்பி)

57வது தினம்!

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
ஒளி விளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
நாகேஸ்வரராவ்-சாவித்திரி
நடித்த
தேவதாஸ் (புதிய கோப்பி)

இங்ஸ்லி
பிளாஸா



ஸ்ரீகிருஷ்ணு
(திருமலை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மற்றும்
சினிமாஸ்திரைகளில்

சிவாஜிகணேசன்
கே. ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிரச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு



ஊட்டிவரை உறவு
இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணுநிதியின் விமர்சனத்துடன்
S. S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணு ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

ஏல விற்பனை

சந்தை, ஆஸ்பத்திரி, கல்லூரிகள் முதலியவை 1/2 — 3/4 மைல் தொலைவுக்குள்ளும்.
திருநெல்வேலி குழாய்நீர் மிக அருகாமையில் கிடைக்கக் கூடியதாகவும் அமைந்துள்ள 20 அடி பாதையுடன் கூடிய 20 கட்டடக்காணித்துண்டுகள் — 43 பரப்புகள் ஏலத்தில் விற்கப்படும்.
1 1/2—2 பரப்புத்துண்டுகளாகவும் பெறலாம்.
விற்பனைக்கான திகதியை எதிர்பாருங்கள்.
யாழ்ப்பாணத்தில் எமது பிரதிநிதி:
சி. கனகரட்ணம், 3-ம் மைல், கொக்குவில்.
அவ்லோன் ட்ரேட்ஸ்
றியல் எஸ்டேட் ஏஜன்ட்ஸ்
குருநாகல்.
டெலி: 6179 1199



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org